
# ஆவி ஆத்துமா சரீரம் PART. I

# SPIRIT SOUL AND BODY PART. I



REV. DR. VASANTH EDWARD, D.D.

THANKS TO OUR ALMIGHTY GOD. MAY GOD BLESS YOU AND MAY HOLY SPIRIT LEAD YOU

## *To the Readers*

Dear Beloved Brother/Sister, Thank you for downloading this Ebook. Please note that this Ebook is copyrighted by the author of the book or the publisher of the book or as mentioned in the book. Word of God Ministries is just providing you this ebook as free of cost and it is for your personal use not for commercial purposes.

## *To the Copyright Owners*

Dear Copyright owners, Word of God Ministries is doing this Free Ebook service to help the people who are not able to find the printed copy of your book from various countries arround the world and to the people who are restricted to have the printed materials in their house. And this will help the readers to improve their spiritual life.

If you want your new books to be published here as Free Ebook, kindly EMAIL US at wordofgod@wordofgod.in or CALL US at +91 7676505599, +91 9964747708, +91 9964422489

If you feel that your book should not be published, we are KINDLY REQUESTING YOU TO EMAIL US at wordofgod@wordofgod.in or CALL US at +91 7676505599, +91 9964747708, +91 9964422489. We will remove it from our Free Service as early as possible.

## *About Word of God Ministries*

**Word of God Ministries** was founded in the year 2007, July 29th with the grace and leading of Almighty God by Bro. Yesudas Solomon as an interdenominational ministry. The popular ministry "**Word of God Team**" is one among our various ministries. Now this ministry has 10 branches such as **1)** Word of God Team, **2)** Mobile Ministry, **3)** Internet Ministry, **4)** Deaf Ministry, **5)** Blind Ministry, **6)** Tribal Ministry, **7)** Computer Ministry, **8)** Audio Ministry, **9)** Video Ministry and **10)** Printing Ministry. We all thank our God with full of our heart for using us in His Great Ministry. We need your continuous prayer support. Our vision is to "Reach the Unreached through Technology". Our websites are: www.WordOfGod.in, www.ChristiansMobile.com, www.FreeChristianEbooks.in, www.IndianBibles.net, www.ChristianAudioBooks.in, www.WordOfGodTeam.com, www.WordOfGodMinistry.in, www.KannadaBible.net, www.KannadaChristian.net, www.PrayForKarnataka.com

சமாதானத்தின் தேவன் தாமே உங்களை முற்றிலும் பரிசுத்தமாக்குவாராக! உங்கள் ஆவி ஆத்மா சரீரம் முழுவதும் நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்து வரும் போது குற்ற மற்றதாயிருக்கும்படி காக்கப்படுவதாக!

1 தெச 5 : 24.

IMMANUEL GOSPEL LIBRARY
9th Main Road
Mariyappana Palya
4th Cross, Magadi Road
BANGALORE - 560 023

# முன்னுரை

வரப்போகிற 'ஷைலோவாகிய' இயேசுவின் இனிய நாமத்தில் வாழ்த்துக்கள். ஆவிக்குரிய வாழ்வில் அறியாமையினால் விசுவாசிகள் எவ்வளவாய் ஏமாற்றப்படுகிறார்கள் என்பதைக் கண்ட என் உள்ளம் கலங்கியது. வஞ்சனைகள், ஏமாற்றுக்கள் மாய்மாலங்கள் மாறுமா என கண்ணீர் கர்த்தருடைய சந்நிதியில் வடித்ததின் விளைவே இந்த புஸ்தகம். குற்றம் கண்டு பிடிக்கும் நோக்கத்தோடு அல்ல. ஆவிக்குரிய அறியாமை அகன்று வேத வசனத்தின்படி வாழ்க்கை அமையவேண்டும் என்ற ஆவலோடு இது எழுதப்பட்டது. உணர்ச்சி வசப்படுபவர்கள் உன்னத அநுபவங்களை அனுபவிக்கமுடியாது அப்படிப்பட்டவர்களை உணர்ச்சியின் அடிப்படியில் பிசாசு எளிதாக வஞ்சித்து விடுகிறான். ஆனால் வேத வசனத்தின்படி வாழ்க்கையை அமைத்தோமென்றால் நாம் வெற்றியுள்ள வாழ்க்கை வாழமுடியும்.

இந்த புஸ்தகம், ஆவிக்குரிய அறியாமையை நீக்கி கண்களை தெளிவித்து, வஞ்சகரின் பிடியிலிருந்து விடுபட்டு வல்லமையுள்ள கர்த்தரின் சாட்சியாக வாழ உதவி செய்ய வேண்டுமென ஜெபிக்கிறேன்.


விம்பர்லிகஞ் சபையில் தொடராக கொடுக்கப்பட்ட இச்செய்தியை புஸ்தக வடிவில் உருவாக பெருமுயற்சி எடுத்த என் தம்பியும் அந்தமானில் மிஷினெரியாக பணிபுரியும் ரூபன் சத்தியராஜுக்கும் உடன் ஊழியர்களுக்கும் என் மனமார்ந்த நன்றி! ஜெபத்துடன் படியுங்கள், கர்த்தர் உங்களனைவரையும் ஆசீர்வதிப்பாராக!


ஷைலோவின் பணியில்
வசந்த் எட்வர்ட்.

IMMANUEL GOSPEL LIBRARY
BOOK No. 158 C
BANGALORE-23

# எங்கள் ஊழியம் :

கர்த்தராகிய இயேசுவினால் இரட்சிக்கப்பட்டு, ஊழியத்திற்கு அழைக்கப்பட்ட நாங்கள் இந்திய மக்கள், விசேஷமாக அந்தமானின் ஆதிவாசிகள் இயேசுவின் இணையிலா அன்பை அறிய வேண்டும் என்ற ஒரே நோக்கத்தோடு, சமாதான கர்த்தராகிய ஷைலோவின் (ஆதி 49 : 10) பேரில் ஊழியம் செய்கிறோம்.





அந்தமானை இயேசுவுக்கு சொந்தமாக்கும் பணியில் இதுவரை இரண்டு வித ஆதிவாசிகளை சந்தித்து சுவிசேஷம் அறிவித்துள்ளோம்! இதுபோக இரட்சிக்கப் பட்டவர்கள் ஆராதிக்க ஆறு சபைகள் அங்கு உருவாக்கியுள்ளோம். செங்கல்பட்டின் அருகிலுள்ள ஆனூரிலும், ஆலந்தூரிலும், அசோக்நகரிலும் சபை உண்டு. இதுபோக சுவிசேஷ கூட்டங்கள் மூலமாக இயேசுவின் அன்பை ஆயிரக்கணக்கான மக்களுக்கு வாரந்தோறும் அறிவிக்கிறோம். "இயேசுவின் அன்பு எங்களை நெருக்கி ஏவுகிறபடியால்" அன்பரின் பணியில், விசுவாசத்தோடு, பல இன்னல்கள், நிந்தனைகள், பாடுகள் மத்தியில் உற்சாகமாய் விரைந்து செல்கிறோம். எங்களுக்காக ஜெபித்துக்கொள்ளுங்கள். கர்த்தர் உங்கள் அனைவரையும் ஆசிர்வதிப்பாராக!

ஷைலோவின் பணியில்
வசந்த் எட்வர்ட்

# ஆவி ஆத்துமா சரீரம்

## THE SPIRIT, SOUL AND BODY

**CHAPTER I**

மனிதன் 3 பகுதிகளாகப் பிரிக்கப்பட்டிருக்கிறான்.

அவையாவன:-

(1) ஆவி (SPIRIT)
(2) ஆத்துமா (SOUL)
(3) சரீரம் (BODY) என்பவையாகும்

அதாவது எழுதுகிற எனக்கும், வாசிக்கிற உங்கட்கும் ஒரு ஆவி உண்டு. நல்ல ஒரு வாட்டசாட்டமான சரீரமும் உண்டு. உலகிலுள்ள யாவருக்கும் இதே காரியங்கள் நிச்சயம் உண்டு,

நான் ஒரு சமயம் ஓரிடத்தில் மேற்கண்ட காரியத்தைப் பிரசங்கம் பண்ணிக்கொண்டிருந்தேன். அதை எனக்குத் தமிழில் மொழி பெயர்த்துக்கொண்டிருந்தவர் நிறுத்திவிட்டு "அப்படியா பிரதர் இதுவரை எனக்குத் தெரியவே தெரியாதே" என்றார், அப்படியானால் இதைக்குறித்த போதனையை இதுவரை நாம் சரிவர அறியவில்லையென்றும், அறிய வேண்டியது மிக்க அவசியம் என்பதும் புரிகிறதல்லவா?

இங்கே நாம் படிக்கப்போவது ஒரு தத்துவம் அல்ல, யாவுமே வேத வசன அடிப்படையிலே அமைய வேண்டுமல்லவா? எனவே வேத வசனங்களைக்கொண்டே நாம் துவங்கலாம்.

ஆதியாகமம் : 1:26

"பின்பு தேவன் நமது சாயலாகவும், நமது ரூபத்தின்படியேயும் மனுஷனை உண்டாக்குவோமாக"... என்றார்

மேற்கண்ட வேதவசனம் மனிதன் எவ்விதமாய் உண்டாக்கப்பட்டான் என்பதை காண்பிக்கிறது. ஆண்டவர் என்ன சொல்கிறார்?

நமது சாயலாகவும்
நமது ரூபத்தின்படியேயும் என்கிறார்

அப்படியானால் இது தனிமையில் சொல்லப்படவில்லை. பன்மையில் கூறப்பட்டுள்ளதல்லவா? சரி தேவ சாயலில் மனிதன் உண்டாக்கப்படுவதற்கு முன் தேவனுடைய சாயல் என்ன என்பதை அறிவது மிக்க அவசியமானது.

தேவனனவர் 3 விதங்களில் அறியப்படுகின்ருர். ஆங்கிலத்தில் TRINITY அல்லது TRI-UNITY எனப்படுகிறது. தமிழில் திரித்துவம்" என்கிருேம். 3 விதங்களில் தேவன் கிரியை செய்கின்ருர்.

(1) பிதாவாகிய தேவன் (GOD THE FATHER)

(2) குமாரனுகிய தேவன் (GOD THE SON)

(3) பரிசுத்த ஆவியாகிய தேவன் (GOD THE HOLY SPIRIT)

தேவன் 3 விதங்களில் அறியப்பட்டாலும் ஒன்ருகவே இருக்கிருர். 3 விதங்களில் பிரிந்து கிரியை செய்கிறவராக காணப்பட்டாலும் தேவன் ஒன்ருகவே யிருக்கின்ருர்.

எப்படி மூன்றும் தனிப்பட்ட விதத்தில் கிரியை செய்கிறது அதே சமயம் ஒன்ருக இருப்பது எப்படி என்பதை அனேகர் புரிந்து கொள்ள முடியா நிலைமையிலுள்ளனர். இதை அறிய:

I யோவான்: 5:7

"பரலோகத்திலே சாட்சியிடுகிறவர்கள் மூவர் பிதா, வார்த்தை, பரிசுத்த ஆவி என்பவர்களே, இம் மூவரும் ஒன்றுயிருக்கிருர்கள்".

இதை கவனிப்போமானல் பரலோகில் சாட்சியிடுவோர் மூன்று பேர்

பிதாவாகிய தேவன்
வார்த்தையாகிய இயேசுக் கிறிஸ்து
பரிசுத்த ஆவியாகிய தேவன்

அதே சமயம் இம் மூவரும் ஒன்ருயிருக்கிருர்களாம். புரிந்துகொள்ள சற்று கடினமானபடியால் இதை ஒரு உதாரணமூலமறியலாம் யாவரும் அறியக்கூடிய சூரியனை எடுப்போம். இது வானத்தில் இருக்கிறது இதற்கு ஒளி இருக்கிறது கூடவே வெப்பமும் உள்ளது

SUN (சூரியன்)
LIGHT (ஒளி)
POWER (வெப்பம்)

என்ற 3 நிலைமையிலானுலும் சூரியன் ஒன்றேதான். இதினின்று வெளிச்சம் வருகின்றது. இதினின்று வெப்பம் வருகின்றது.

சூரியன் தனியாகவும், ஒளி தனியாகவும் வெப்பம் தனியாக வித்தியாசமாய் காணப்படினும் இதை ஒன்ருகச் சேர்த்து சூரியன் என்றே அழைக்கிறேம்.

இவ்வண்ணமே:-

(1) பிதாவாகிய தேவன் சூரியனைப்போலிருக்கிறர்....வேதமும் இதை I : தீமோ 6:16ல் ''அவர் சேரக் கூடாத ஒளியில் வாசம் பண்ணுகிறவர்'' என்கிறது.

(2) சூரியனிலிருந்து ஒளி எப்படி வருகிறதோ அவ்வண்ணமே சூரியனைப்போலுள்ள பிதாவிடமிருந்து ''நானே உலகின் ஒளி'' என்று இருள் நீக்கிட இயேசு வெளிப்பட்டார், இதை ''உலகத்திலே வந்து எந்த மனுஷனையும் பிரகாசிப்பிக்கிற ஒளியே அந்த மெய்யான ஒளி'' (யோவான் : 1:9) என்ற வசனம் மூலம் அறியலாம்.

(3) சூரியனிலிருந்து எப்படி வெப்பம் (Power) வருகின்றதோ அதே வண்ணம் பிதாவிடமிருந்து''வல்லமை''யாக வெளிப்பட்டவர் பரிசுத்தாவியானவர். இதை ''பரிசுத்த ஆவி உங்களிடத்தில் வரும்போது நீங்கள் பெலனடைந்து'' (வல்லமையடைந்து) (அப்.1:8) என்ற வசனம் மூலமறியலாம்.

மேற்கண்டவற்றின் மூலம் ''திரித்துவம்'' என்ருல் என்னவென்று ஓரளவு புரிய முடிகிறதல்லவா? இதைப்பற்றி எவ்வளவோ புத்தகங்கள் எழுதினலும் புரிவது கடினமாகையால் நாம் இதை இத்துடன் விட்டு தொடர்ந்து முன்னேறுவோம். முன்பு விட்டதான ஆதியாகமம் 1:26க்கு திரும்பி வருவோம்.

தேவன் மனிதனை தமது சாயலாகவும் தமது ரூபத்தின்படியேயும் உருவாக்க எண்ணினரல்லவா? எனவே தேவனின் தன்மை மனிதனில் காணப்படுகிறது. எப்படி தேவன் 3 விதங்களில் பிரித்து அறியப்பட்டாலும் ஒன்ருகவே இருக்கின்ருரோ அவ்வண்ணமே மனிதனும் தன்னில்தானே,

ஆவியை யுடையவனுக, ஆத்துமாவையுடையவனுக,
சரீரத்தையுடையவனுக

மூன்று வித நிலைமைகளில் காணப்படினும் வெவ்வேருக கிரியை செய்தாலும் மனிதன் ஒன்ருகவே யிருக்கின்ருன். தேவனின் தன்மை மனிதனில் காணப்படுவதை புரிந்துகொள்ளவேண்டும். இதுவே மனிதனைப்பற்றிய கிறிஸ்தவ அடிப்படை சத்தியம். எனவே ஒவ்வொரு மனிதனும் நான் 3 வித நிலைமைகளில் தேவ சாயலாக சிருஷ்டிக்கப்பட்டிருக்கிறேன் என்பதை நிச்சயம் அறிந்திருக்க வேண்டும்.

இன்னும் சிருஷ்டிப்பை கவனிக்கும்போது ஆதியாகமம்: 2:7ல் 'தேவனுகிய கர்த்தர் மனுஷனைபூமியின் மண்ணினுலே உருவாக்கி ஜீவ சுவாசத்தை அவன் நாசியிலே ஊதினுர்; மனுஷன் ஜீவாத்துமாவானுன்'' என்று காணப்படுகிறது. இவ்வசனப்படி தேவன் மண்ணினுலே முதலாவது ஒரு சரீரத்தை (Body) உண்டு பண்ணுகிருர். இது உருவாக்கப்பட்டபடியினுல்தான் ''நீ மண்ணுயிருக்கிருய் மண்ணுக்குத் திரும்புவாய்'' என ஆதி: 3:19ல் ஆண்டவர் சொன்னுர். எனவேதான் ஒருவன் மரிக்கும்போது அந்தரத்தில் கட்டி தொங்கவிடாமல் மண்ணில் புதைக்கின்ருேம்.

இரண்டாவது மண்ணுலான இச்சரீரத்தில் தேவன் ஜீவ சுவாசத்தை அல்லது ஆவியை ஊதினுர். ஆவியை ஊதினபோது அல்லது சரீரமும் ஆவியும் இணைந்தபோது மனிதன் ''ஜீவாத்துமாவானுன்''என வேதம் சொல்கிறது. இங்கே ஆவி, ஆத்துமா, சரீரம் இம்மூன்றும் ஒன்ருய் இணைவதை தெளிவாய் காண முடிகிறதல்லவா? இங்கே தேவனுடைய சிருஷ்டிப்பு எவ்வளவு அற்புதமானது என்பதைக் காணமுயும்.

மனிதன் ஆவியானவன்; இந்த ஆவிக்கு ஒரு ஆத்துமா இருக்கின்றது. இவ்விரண்டும் சேர்ந்து சரீரத்தில் வாசம் பண்ணுகின்றன. நாம் உலகில் ஒரு வாடகை வீட்டில் குடியிருக்கும் வண்ணம் நிலையற்ற கூடாரமாகிய சரீரத்தில் வாசமாயிருக்கின்றன. ஒரு நாளில் இச்சரீரம் பூமிக்குரிய வாழ்வை விட்டு ஒழிந்துபோகும் ஆவியும் ஆத்துமாவும் தேவனிடம் திரும்பும் என்பதை நன்கு புரிந்துகொள்ளவேண்டும்.

I தெசலோனிக்கேயர் : 5:23ல் ''சமாதானத்தின் தேவன் தாமே உங்களை முற்றிலும் பரிசுத்தமாக்குவாராக! உங்கள் ஆவி ஆத்துமா, சரீரம் முழுவதும் நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்து வரும்போது குற்றமற்றதாயிருக்கும்படி காக்கப்படுவதாக'' என்று வாசிக்கிறோம். இவ்வசனப்படி மனிதன் ஆவி, ஆத்துமா, சரீரம் என்ற 3 நிலைகளையுடையவன் என்றும் இவை மூன்றும் தனிப்பட்ட முறையில் குற்றமற்றதாயும், பரிசுத்தமாயும் கர்த்தருடைய வருகையில் காணப்பட வேண்டும் என திட்டமாய் காண முடியும். இவை மூன்றும் தனிப்பட்ட தன்மையுடையவை எனவும் தெளிவாய் காண்கின்றோம். சில சமயங்களில் ஆவி, ஆத்துமா இரண்டிற்குமுரிய வித்தியாசங்களை அறிய முடியாமல் குழம்புவோரும் உண்டு. எனவே இதற்குரிய மூல கிரேக்க எபிரேய பதங்களை அறிவது நலமாயிருக்கும்.

### 1 ஆவி (Spirit)

எபிரேய பதம் — RUWACH (ரூவாக்) } மூச்சு, ஆவி, காற்று
கிரேக்க பதம் — PNEUMA (ந்யூமா) } (மனித ஆவி)

### 2 ஆத்துமா (SOUL)

எபிரேய பதம் — NEPHESH (நெஃபேஷ்) } மனது
கிரேக்க பதம் — PSUCHIKOS (சூக்கிகோஸ்) } (ஆத்துமா)

### 3 சரீரம் (BODY)

எபிரேய பதம் — BASAR (பாஸார்) } சதை, (சரீரம்) மாமிசம்
கிரேக்க பதம் — SOMAH (ஸோமா) }

மேற்கண்ட மூல பதங்களினின்று காணும்போது ஆவி, ஆத்துமா, சரீரம் மூன்றும் தனிப்பட்டவை என்பது பலமாய் நிரூபிக்கப்படுகிறதல்லவா? என்றாலும் சில சமயங்களில் ஆவியையும் ஆத்துமாவையும் பிரிப்பதில் தடுமாறுகிறோம். ஏனெனில் ஆவியின் தன்மைகளும், ஆத்துமாவின் தன்மைகளும் கிட்டத்தட்ட ஒன்றாகவே காணப்படும், என்றாலும் இதைப் பிரிக்கும் ஒரே ஒரு கருவி உண்டு. அது ''தேவனுடைய வார்த்தையே.'' எபிரேயர் 4 : 12ல் இவ்வாறு காண்கிறோம் ''தேவனுடைய வார்த்தையானது ஜீவனும் வல்லமையும் உள்ளதாயும் இருபுறமும் கருக்குள்ள எந்தப் பட்டயத்

திலும் கருக்கானதாயும் ஆத்துமாவையும், ஆவியையும், கணுக்களையும் ஊனையும் பிரிக்கத்தக்கதாக உருவக்குத்துகிறதாயும், இருதயத்தின் நினைவுகளையும் யோசனைகளையும் வகையறுக்கிறதாயும் இருக்கிறது''

மேற்கண்ட வசனம் மூலம் தேவனுடைய வார்த்தையானது வல்லமையுள்ளது என்றும் இதன் மூலம் மட்டும்தான் ஆவியையும் ஆத்துமாவையும் பிரித்தறிய முடியும் என்று திட்டமாய் அறிகின்றோம். இதை அறியாதவர்கள் ஆவிக்கும் ஆத்துமாவுக்கும் வித்தியாசம் தெரியாமல் குழம்பி விடுகின்றனர். சில சமயங்களில் இதையறியாதபடியால்தான் சிலர் பரிசுத்தாவியின் வரங்களில் கிரியை செய்யும்போது அவசரப்பட்டு மனதில் தோன்றும் எண்ணங்களை தேவனுடைய செய்தி என எண்ணி சபைக்கு கொடுத்து விடுகின்றனர். பின் இது தவறாகி விடுகின்றன. இதைப்பற்றி பின்னால் விபரமாகப் படிக்கலாம். இனி தொடர்ந்து 3 பகுதிகளையும் தனித்தனியாக ஆராய்ந்து அறியலாம்.

**ஆவி–ஆத்துமா–சரீரம் இவற்றின் வேலைகள்:-**

## 1. ஆவி - SPIRIT

ஆவி எப்போதுமே ஆவிக்குரிய காரியங்களில் அல்லது ஆண்டவருடன் சம்பந்தப்பட்ட காரியங்களிலேயே ஈடுபடும். (The Spirit always deals with the Heavenly things or Godly things or Spiritual things,)

## 2. ஆத்துமா

ஆத்துமா என்பது உணர்ச்சிகளில், அறிவுக்கடுத்த காரியங்களிலேயே ஈடுபடுகின்றது. (The Soul always deals with the passions or the intellectual part) ஆத்துமா மனதின் எண்ணங்களில் ஈடுபடுகிறது.


## 3. சரீரம்

சரீரம் எப்போதுமே சரீரப் பிரகாரமான அல்லது உலகப் பிரகாரமான, மாம்சீகத்துக்குரிய காரியங்களில் ஈடுபடுகின்றது. (The flesh always deals with the Physical things)


x x x x x

## CHAPTER 2

மனிதனின் ஆவி, ஆத்துமா, சரீரத்தை விளக்க கீழே 2 வித படங்கள் காணப்படுகின்றன. இதன் மூலம் சில சத்தியங்களை எளிதாய்ப் புரிந்துகொள்வோம்.




(1) ஆவி (SPIRIT)
(2) ஆத்துமா (SOUL)
(3) சரீரம் (BODY)




(1) ஆத்துமா
(2) ஆவி
(3) சரீரம்

மேற்கண்ட படங்களின் மூலம் ஆவி, ஆத்துமா, சரீரம் மூன்றின் பிரிவுகளையும் அறியலாம். இரண்டிலும் நடு மையமாகக் காணப்படுவது மனிதனின் ஆவியே. இவற்றை முறையாக விளங்கிக் கொள்ள ஒவ்வொன்றையும் தனித்தனியாகப் படிக்கலாம்.

### I. மனிதனின் ஆவி [THE SPIRIT OF MAN]

ஆவியைக் குறித்துப் படிக்கலாம் என்றவுடன் சிலர் கலக்கமடையலாம். பிசாசின் ஆவியோ அல்லது பரிசுத்தாவியோ பற்றி படிக்கப்போவதில்லை. நம்மிலுள்ள ஆவியைப்பற்றிப் படிக்கலாம்.

இந்த ஆவிதான் ''உண்மையான மனிதன்'', வெளிப்புறமாய்த் தோற்றமளிப்பவன் உண்மையான மனிதனல்ல, அவன் அழியக்கூடியவன். இந்த ஆவியாகிய உள்ளான மனிதன்தான் என்றென்றும் நிலைத்திருக்கக் கூடியவன். இந்த ஆவிக்கு வேதத்தில் சில பெயர்கள் தரப்பட்டுள்ளன.

1 IIகொ : 4 : 16 :- "ஆனபடியினலே நாங்கள் சோர்ந்து போகிறதில்லை எங்கள் புறம்பான மனுஷனனது அழிந்தும் உள்ளான மனுஷனனது நாளுக்கு நாள் புதிதாக்கப்படுகிறது" இதிலே உள்ளான மனுஷன், (inward man or innerman) எனப்படு வதுதான் "ஆவி" அதேசமயம் புறம்பான மனுஷன் அழிந்து விடுகிருன். 40 வயது ஆகும் போது எப்படிபட்ட சரீரமும் சுருக்கம் விழத்துவங்குகிறது. கழுதைக்குட்டி இளமையில் பார்க்க அழகாயிருப்பது போல மனிதனும் இளமையில் அழகாய்த்தானி ருக்கிருன். ஆனல் சரீரம் நாளடைவில் அழகிழந்து, பெலனிழந்து அழியத்துவங்குகின்றது. அதேசமயம் உள்ளான மனுஷனன ஆவியோ நாளுக்கு நாள் புதிதாக்கப்படுகின்றது. அல்லது புதிதாக உருவாகிக் கொண்டிருக்கிறது

2 Iபேதுரு : 3 : 4 :- "அழியாத அலங்கரிப்பாயிருக்கிற சாந்தமும், அமைதலுமுள்ள ஆவியாகிய இருதயத்தில் மறைந் திருக்கிற குணமே உங்களுக்கு அலங்காரமாயிருக்கக்கடவது" இவ்வசனத்தில் "இருதயத்தில் மறைந்திருக்கிற குணம்" என்பது ஆங்கில வேதத்தில் "The Hidden Man of the Heart" என்று காணலாம். அதாவது "இருதயத்தில் மறைந்திருக்கிறமனிதன்" என்று பொருள். இதுவே "ஆவி" யாகும்.

மேற்கண்ட இரண்டு வசனங்களின்படி ஆவியானது

1. உள்ளான மனுஷன் (Inward man or innerman)
2. மறைந்திருக்கிற மனுஷன் (The Hidden man of the Heart)

என்ற பெயர்களில் வேதத்தில் காணப்படுகின்றது.

## இந்த ஆவியை யார் தந்தது?

ஆதியாகமம் 2:7ன் படி தேவன் மனிதனில் ஜீவ சுவாசத்தை ஊதினர் அல்லது ஆவியை ஊதினர் என்று படித்தோம், தொடர்ந்து நீதிமொழிகள் : 20 : 27ல் "மனுஷனுடைய ஆவி கர்த்தர் தந்த தீபமாயிருக்கிறது அது உள்ளத்தில் உள்ளவைகளை யெல்லாம் ஆராய்ந்து பார்க்கும்" என அழகாக எழுதப் பட்டுள்ளது. தேவன் மனிதனுக்குக் கொடுத்த தீபம் தான் மனிதனிலுள்ள ஆவியாகும்.

அமெரிக்காவில் போரில் இறந்த அடையாளம் காண முடியாத வீரர்களின் சடலங்கள் யாவையும் புதைத்து வைத்து அங்கு எப்போதும் வருடம் முழுவதும் அணையாமல் எரிந்து கொண்டிருக்கும் ''அணையா ஜோதி'' ஒன்றை வைத்து தங்கள் அன்பையும், நினைவையும் வெளிப்படுத்தியுள்ளனர். அதன் மதிப்பையும் மரியாதையும் அளவிட முடியாது. அப்படியானால் மனிதனில் எப்போதும் எரிந்துகொண்டிருக்க வேண்டுமென தேவன் தந்த ஆவியின் முக்கியத்துவம் இதையும் விட அதிகமானதல்லவா? கர்த்தர் தந்த தீபமானால் அது நிச்சயம் விலையேறப் பெற்றதேயாகும். ஆனால் இந்த ஆவிதான் ஜீவாத்துமாவாக இருந்த ஆதாமாகிய ஆதி மனிதன் ஏதேனில் பாவம் செய்த போது கட்டப்பட்டு போயிற்று. அவன் பாவம் செய்து தேவ மகிமையை இழந்தபோது தன்னுடைய சுயாதீன நிலையை இழந்து கட்டப்பட்ட நிலையிலாயிற்று. எனவேதான் இன்றும் இரட்சிக்கப் படாதவனுடைய ஆவி கட்டப்பட்டே உள்ளது. முன் பகுதியிலுள்ள இரண்டு படங்களிலும் ஆவி சிறைப்பட்ட நிலையில் காணமுடியும். எனவேதான் எண்ணங்கள், செயல்கள் யாவும் மோசமான நிலையிலுள்ளன. ''இதோ நான் துர்க்குணத்தில் உருவானேன். என் தாய் என்னைப் பாவத்தில் கர்ப்பந்தரித்தாள்'' (சங். 51:5) என்ற வசனப்படி பிறக்கும் போதே கட்டப்பட்ட நிலைமை ஆதிமுதலே தொடர்ந்து வருகின்றது. விடுதலையோடு கிரியை செய்ய வேண்டிய மனிதனின் ஆவி அவன் பாவம் செய்த போது பிசாசின் கட்டுக்குள் அல்லது பிசாசுக்கு அடகு வைக்கப் பட்டது என்ற நிலையிலாகி விட்டது. இப்படிக் கட்டப்பட்ட ஆவி நிச்சயம் விடுதலை செய்யப்பட வேண்டும் அல்லவா? வேதம் சொல்கிறது,

''ஆகையால் குமாரன் உங்களை விடுதலையாக்கினால் நீங்கள் மெய்யாகவே விடுதலையாவீர்கள் (யோ : 8 : 36)

''சத்தியத்தையும் அறிவீர்கள் சத்தியம் உங்களை விடுதலையாக்கும் என்றார். (யோ: 8:32)

கட்டப்பட்ட ஆவி தன் விடுதலைக்காக ஏங்கிக் கொண்டிருக்கிறது, எனவேதான் மனிதன் எப்படிப்பட்டவனாயிருந்தாலும் ''மெய்யான சத்தியத்தை'' அறியவேண்டுமென பலவித வழிகளில்

முயற்சிக்கிறுன். ஆனுல் வேதவசனப்படி ரோமர்: 5:15-21ன் படி உலகிலே ஒரு மனிதனுலே பாவம் வந்து எல்லாருடைய ஆவியும் கட்டப்பட்டது போல "ஒருவராலேயே" அந்த ஆவிக்கு விடுதலையும் வரவேண்டும் என்ற வசனப்படி "இயேசு கிறிஸ்துவாகிய அவராலேயன்றி" நமது ஆவியை விடுவிப்பார் எவருமில்லை. முந்தின ஆதாமினுலே சாபம் வந்தது. பிந்தின ஆதாமாகிய இவராலே மீட்பு உண்டாயிற்று.

ஒருவன் இரட்சிக்கப்படுகிறுன் அல்லது மனந்திரும்புகிறுன் என்பது இந்தக் கட்டப்பட்டுப் போன ஆவியை பரிசுத்தாவியான வரின் உதவியுடன் குமாரனுகிய கிறிஸ்து விடுதலை செய்வதையே குறிக்கும். இது எப்படி என்பதை யோவான்: 3:6 ல் "மாம்சத்தினுல் பிறப்பது மாம்சமாயிருக்கும் ஆவியினுல் பிறப்பது ஆவியாயிருக்கும்" (That which is born of the flesh is flesh and that which is born of the Spirit is spirit) இவ்வசனத்தில் "ஆவியினுல் பிறப்பது" என்பது பரிசுத்த ஆவியினுல் என்பதைக் குறிக்கும். கட்டப்பட்ட ஆவியானது ஒருவன் மறுபடியும் பிறக்கும் போது அவிழ்க்கப்படுகிறது அல்லது விடுதலை செய்யப்படுகிறது.

ஆவி விடுதலை செய்யப்பட்டதுடன் நின்றுவிடாமல் ஆத்துமாவும், சரீரமும் புதிதாக்கப்பட வேண்டும். இது செய்யப்படாத படியால் தான் இன்று சிலரைப் பற்றி "இரட்சிக்கப்பட்டேன்" என்று சொல்கிறுர்கள், ஆனுல் கோபம், வைராக்கியம், பொறுமை போன்ற பழைய சுபாவங்கள் மறையவில்லையே என்கிறோம்.

ஒருவன் இரட்சிக்கப்படும் போது கட்டப்பட்ட ஆவியானது விடுதலை செய்யப்படுவதால் அவன் ஆவிக்குரிய விடுதலையான வாழ்விற்கு தயாராகிறுன். இயேசுவானவர் நம் ஆவியை விடுதலை செய்யும்படி தம் இரத்தத்தை விலைக்கிரயமாகச் செலுத்தினுர். அதை விசுவாசித்து ஏற்றுக் கொள்ளும்போது ஆவியானவரின் உதவியுடன் இயேசுவானவரே நம்மை விடுவிக்கிறுர். இதன் பின்பு என்ன நடக்கிறது?

> "இப்படியிருக்க ஒருவன் கிறிஸ்துவுக்குள்ளிருந்தால் புதுச் சிருஷ்டியாயிருக்கிறுன். பழையவைகள் ஒழிந்து போயின எல்லாம் புதிதாயின" (II கொரி: 5;17)

மேற்கண்ட வசனப்படி இரட்சிக்கப்பட்ட பின்பு ஒரு புதிதான ஆவி அல்லது கட்டவிழ்க்கப்பட்ட ஆவியாக மாறுகின்றது. முன்பு பிசாசினால் கட்டப்பட்ட அசுத்த நிலையில் மூடப்பட்டிருந்த ஆவியானது இயேசுவின் இரத்தத்தால் கழுவப்பட்டு பரிசுத்தமான ஆவியாக மாறுகிறது. இதன் பின்பு நடப்பது என்ன ?

"உங்களுக்கு நவமான இருதயத்தைக் கொடுத்து, உங்கள் உள்ளத்திலே புதிதான ஆவியைக் கட்டளையிட்டு, கல்லான இருதயத்தை உங்கள் மாம்சத்திலிருந்து எடுத்துப் போட்டு சதையான இருதயத்தை உங்களுக்குக் கொடுப்பேன்" (எசேக்கியேல்: 36:26)

மேற்கண்ட வசனப்படி இரட்சிக்கப்படும் போது புதிதான ஆவியைப் பெறுகிறோம் என்பது உறுதியாகிறதல்லவா? இது மட்டுமன்றி கல்லான இருதயம் எடுக்கப்பட்டு சதையான இருதயம் கொடுக்கப்படுகிறது. நாம் புதிதான ஆவியையுடையவர்கள் என்பதை வேத வசனப்படி

"நீதியுண்டாக இருதயத்திலே விசுவாசிக்கப்படும் இரட்சிப்புண்டாக வாயினாலே அறிக்கை பண்ணப்படும்" (ரோ: 10:10)

இதைச் செய்வது யார்? வேதவசனம் சொல்கிறது

"நாம் தேவனுடைய பிள்ளைகளாயிருக்கிறோமென்று ஆவியானவர் தாமே நம்முடைய ஆவியுடனே கூடச் சாட்சி கொடுக்கிறார்" (ரோ: 8:16)

"அவருடைய நாமத்தின் மேல் விசுவாசமுள்ளவர்களாய் அவரை எற்றுக் கொண்டவர்கள் எத்தனைபேர்களோ அத்தனை பேர்களும் தேவனுடைய பிள்ளைகளாகும்படி அவர்களுக்கு அதிகாரங் கொடுத்தார்" (யோ: 1:12)

என்ற வசனப்படி அந்த "அதிகாரத்தை" பரிசுத்த ஆவியானவர் நாம் தேவனுடைய பிள்ளைகள்தான் என்பதை நமது ஆவியுடனே கூடச் சேர்ந்து சாட்சியிடுகின்றார் என்ற சத்தியத்தை நாம் அறிய வேண்டியது அவசியம். இரண்டாவதாக "ஒருவன் என்னில் அன்பாயிருந்தால் அவன் என் வசனத்தைக் கைக்கொள்ளுவான், அவனில் என் பிதா அன்பாயிருப்பார் நாங்கள் அவனிடத்தில் வந்து அவனோடே வாசம் பண்ணுவோம்" (யோ: 14:24)

இவ்வசனப்படி ஒருவன் இரட்சிக்கப் பட்ட பின்பு இரண்டாவது படியாக பிதாவின் தன்மையும் குமாரனின் தன்மையும் நம்மில் காணப்படவேண்டும். பிதாவும், குமாரனும் நம்மில் வாசம் பண்ண துவங்கிய பின் இன்னும் வரவேண்டியர் ஒருவரே. அவரே பரிசுத்த ஆவியானவர்! பரிசுத்தாவியானவரின் கிரியையினுலே தான் ஒருவன் இரட்சிக்கப்பட்டு பிதாவும் குமாரனும் நம்மில் வாசம் பண்ணுகின்றனர். எனவேதான் வேதசத்தியப்படி ஒருவன் இரட்சிக்கப்படுவது பரிசுத்தாவியானவரின் கிரியையே யாளுலும் அவன் பரிசுத்த ஆவியானவரின் அபிஷேகத்தைப் பெற வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்துகின்றேம்.

> ''உங்கள் உள்ளத்திலே என் ஆவியை வைத்து உங்களை என் கட்டளைகளில் நடக்கவும் என் நியாயங்களைக் கைக் கொள்ளவும் அவைகளின்படி செய்யவும் பண்ணுவேன்'' (எசேக்கியேல்: 36:27)

முன்பகுதியில் எசே: 36:26ல் உங்கள் ''உள்ளத்திலே புதிதான ஆவியை கட்டளையிட்டு'' என்ற வாக்குரைத்த ஆண்டவர் இங்கே 27வது வசனத்தில் ''உங்கள் உள்ளத்தில் என் ஆவியை வைத்து'' என்று வாக்குரைக்கிறூர். இரண்டிற்கு முரிய வித்தியாசம் முக்கிய மானது. இரட்சிக்கப்படும்போது புதிதான ஆவியை கட்டளை யிட்ட ஆண்டவர் அதன் பின்பு பரிசுத்த ஆவியின் அபிஷேக மாகிய ''அவருடைய ஆவியை'' வைப்பேன் என்கிறூர். இதில் தான் ஒருவன் பரிபூரணப்படுகிறுன். இப்போது நம் உள்ளத்தில் பிதா, குமாரன், பரிசுத்தாவி ஆகிய மூவரும் வாசம் பண்ணுகிற படியாலும், விடுதலை செய்யப்பட்ட படியாலும் இனிமேல் நம்முடைய ஆவியின் மேல் பிசாசின் ஆளுகைக்கு இடமேயில்லை. நாம் மரணத்துக் கேதுவான பாவம் புரிந்ததினுலோ அல்லது பிதா, குமாரன், பரிசுத்தாவியை மறுதலித்து வெளியே தள்ளினுலோ அன்றி எக்காரணம் கொண்டும் பிசாசுக்கு நம்மேல் உரிமையும், அதிகாரமும் இல்லை என்பதைப் புரிந்து கொண்டால் விடுதலையுடன் வாழலாம். இதன் பின்பு ''நம்முடைய உள்ளான மனுஷனுனது II கொ:4:16ன் படி நாளுக்கு நாள் புதிதாக்கப் படுகிற அனுபவத்தை நம்முடைய அனுதின ஆவிக்குரிய வாழ்வில் கொண்டு வரவேண்டும். ஆவிக் குரிய விஷயங்களில் குழந்தைகளாயிராமல் பெலனுள்ளவர்களாய்'' மாறத்தக்கதாக இவ்வனுபவம் மிக்க அவசியமானதாகும்.

XXXXX

## CHAPTER 3 II ஆத்துமா (SOUL)

மனிதனின் ஆத்துமாவைப் பற்றி ஓரளவு முன் பகுதிகளில் புரிந்துகொண்டிருப்பீர்கள். ஆத்துமாவிலிருந்து அறிவு, உணர்ச்சிகள், ஆசைகள், இச்சைகள் இவைகள் வெளிப்படும். ஆவி, ஆவியானவரின் பூரண ஆளுகைக்குள் வந்துவிட்டது. ஆனால் ஆத்துமாவும் அப்படிப்பட்ட பரிசுத்தாவியானவரின் பூரண கட்டுக்குள் வரவேண்டியது அவசியம். மனித ஆத்துமாவிற்கு ஒரு வல்லமை உண்டு. இதைப் பிசாசு தவறாக வழி நடத்துவதன் மூலம் அனேகர் தங்கள் ஆத்தும வல்லமையை வெளிப்படுத்தி தவறான முடிவுக்குள்ளாகி விடுகின்றனர். அப்படியானால் இந்த ஆத்துமாவின் வல்லமை எப்படிப்பட்டதென வேதவசன வெளிச்சம் மூலமறியலாம்.

''தேவனாகிய கர்த்தர் மனுஷனைப் பூமியின் மண்ணினாலே உருவாக்கி ஜீவ சுவாசத்தை அவன் நாசியிலே ஊதினார் மனுஷன் ஜீவாத்துமாவானான் (ஆதி: 2:7) (Living Soul). ஜீவாத்துமாவாகிய ஆதாமுக்கு சகலமும் ஒப்புவிக்கப்பட்டது ''தேவன் தம்முடைய சாயலாக..... ...அவர்களை நோக்கி நீங்கள் பலுகிப் பெருகி பூமியை நிரப்புங்கள்........ அதைக் கீழ்ப்படுத்தி.........சகல ஜீவ ஜந்துக்களையும் ஆண்டு கொள்ளுங்கள் என்று சொல்லி அவர்களை ஆசீர்வதித்தார். (ஆதி: 1:27-28) (You have dominion over every thing)

இன்றைய நாடுகளில் நம்முடைய ஒரு குடும்பத்தை ஆண்டு கொள்வதே கடுமையான பிரச்சனையாயுள்ளது. ஆனால் ஆதாமாகிய ஜீவாத்துமாவுக்கோ உலக முழுவதையும் தனக்குக் கீழ்ப் படுத்தி யாவையும் ஆண்டுகொள்கிற மகத்துவ வல்லமையை அவன் ஆத்துமாவிலே தேவன் வைத்திருந்தார்.

''தேவனாகிய கர்த்தர் வெளியின் சகலவித மிருகங்களையும், ஆகாயத்தின் சகலவிதப் பறவைகளையும் மண்ணினாலே உருவாக்கி ஆதாம் அவைகளுக்கு என்ன பெயரிடுவான் என்று பார்க்கும்படி அவைகளை அவனிடத்தில் கொண்டு வந்தார். அந்தந்த ஜீவ ஜந்துக்கு ஆதாம் எந்தெந்தப் பேரிட்டானோ அதுவே அதற்குப் பேராயிற்று (ஆதி: 2:19)

மேற்கண்ட வசனப்படி சகலவித ஜீவ ஜந்துக்களுக்கும் ஆதாம் பேரிட்டான். அப்படியானால் ஆதாமின் ஞானம் எப்படிப்

பட்டதென புரிகிறதல்லவா? ZOOLOGY (விலங்கியல்) படிப்போரைப் கேட்டால் என்னென்னவோ பெயர்களைக் கூறுவார்கள். அவைகளை ஞாபகம் வைப்பது மிகவும் கடினமான காரியமாகும். ஆதாம் உலகிலுள்ள யாவுக்கும் பேரிட்டு அழைத் தாராம் அவருடைய அறிவு (Intellect part) அதிகமாயிருந்தது. அறிவு எப்போதுமே ஆத்துமாவின் இருப்பிடம் என்று முன்பே படித்துள்ளபடியால், ஆதாமின் அளவுகடந்தஞானம் அவனது ஆத்தும வல்லமைக்கு ஒரு சான்றாகும்.

> "தேவனாகிய கர்த்தர் மனுஷனை ஏதேன் தோட்டத்தில் அழைத்துக்கொண்டு வந்து அதைப் பண்படுத்தவும் காக்கவும் வைத்தார்" (ஆதி: 2:15)

மேற்கண்ட வசனப்படி பார்க்கும்போது ஏதேன் தோட்டம் முழுவதை பண்படுத்தவும், காக்கவும் போதுமான சகல வல்லமையையும் ஜீவாத்துமாவாகிய ஆதாம் பெற்றிருந்தான் என அறியமுடிகிறதல்லவா? ஏதேன் என்பது நம் வீட்டுக்குப் பின்புறம் போடுகிற தோட்டம் போன்றதல்ல, 5 நதிகள் அதில் உற்பத்தியாகி பாயுமளவிற்கு பெரிதான தோட்டமாகும். ஏராள மான மரங்கள் கொண்டது. இப்படிப்பட்ட ஏதேனை ஒருவனாகவே பண்படுத்தவும் காக்கவும் போதுமான பெலன் எப்படிப்பட்ட தா யிருக்கும்? அந்த ஆதாமின் பெலனில் கோடியில் ஒரு பங்கு கூட நம்மில் இன்று காணப்படுவதில்லையே! ஆராய்ச்சியாளர்களின் முடிவுப்படி நமது மூளையில் 90% வேலை செய்யவில்லை 10% மட்டுமே வேலை செய்கிறதாம். இந்த 10% வேலை செய்யும் மூளையைக் கொண்டே மனிதன் அதிசயமான காரியங்களை செய்வான் என்றால் முழுப்பகுதியும் வேலைசெய்தால் என்னவெல்லாம் செய்வானோ என்று கற்பனைகூட பண்ணமுடியவில்லையல்லவா? ஆதிமனிதன் ஆதாமுக்கு 100%ம் வேலை செய்தது. பாவமாகிய சாபம் வந்து விட்டபடியால் அவ்வல்லமை குறைந்து விட்டது.

> "நீ பூமியிலிருந்து எடுக்கப்பட்டபடியால் நீ பூமிக்குத் திரும்பு மட்டும் உன் முகத்தின் வேர்வையால் ஆகாரம் புசிப்பாய் நீ மண்ணாயிருக்கிறாய் மண்ணுக்குத் திரும் புவாய்" (ஆதி: 3:19)

மேற்கண்ட வசனப்படி சகல வல்லமையுமுடைய மனிதன் பாவம் செய்துவிட்டபடியால் இனி கஷ்டப்பட்டு, நெற்றி வேர்வையை நிலத்தில் சிந்தியே உலகில் பிழைக்க வேண்டிய சாபத்துக் குள்ளானுன். எல்லாவற்றுக்கும் அதிகாரியாயிருந்த ஆதாம் இப்படிப்பட்ட பரிதாபமான நிலைமைக்கு வரக் காரணம் என்ன? பாவமும், கீழ்ப்படியாமையுமே. இங்குதான் அவனுடைய ஆத்துமாவின் வல்லமை, அறிவின் வல்லமை (The power of the intellect part) குறைந்துபோயிற்று. இதுவே நம்மில் எதிரொலிக்கிறது.

இந்த ஆத்தும வல்லமையைக் குறித்து (Soul power) நாம் எச்சரிக்கையாயிருக்க வேண்டும். ஆதியில் இவ்வல்லமை நல்ல காரியங்களுக்குப் பயன்பட்டது. இன்றுே அதே ஆத்தும வல்லமையைப் பிசாசு பயன்படுத்தி ஆவியை அடிமைப்படுத்த முயலுகின்றுன். ஆவியானது பரிசுத்தாவியானவரின் பூரண ஆளுகைக்குள் வந்துவிட்டது, ஆனுல் ஆத்துமா திறந்தே உள்ளது. பிசாசு இந்த ஆத்துமாவைப் பிடிக்க வகை தேடுகிறுன். உதாரணமாக ஜெபிக்க முழங்கால் படியிடும்போதுதான் மனதின் எண்ணங்களில் சாப்பாட்டைப் பற்றியோ வேறு பல வித சிந்தனைகளையோ தூண்டிவிட்டு ஆவிக்குரிய காரியங்களை செய்வதற்கு தடையாக ஆத்துமாவை பிசாசு உபயோகிக்க முயல்கிறுன். ஆத்துமாவிலே ஒரு பெரிய போராட்டம் நடக்கின்றது. இதை நாம் ஆவியானவரின் துணையோடு வேதவசனங்களைச் சார்ந்து நின்று வெற்றி கொள்ளவேண்டியது அவசியம். சில சமயங்களில் ஆத்மாவிலே பலவித மோசமான, இச்சைக்குரிய எண்ணங்கள், துர்ஆலோசனைகள் தோன்றி தாக்குகின்றன. சிலசமயம்

ஜெபம் பண்ணும்போது பலவித எண்ணங்கள்,

பைபிள் படிக்கும்போது தூக்கம் வருதல்,

போன்ற காரியங்களின் மூலம் ஆத்துமாவை தன் கட்டுக்குள் கொண்டுவர எப்படியாயினும் தொடர்ந்து முயற்சிக்கிறுன். எனவே ஆத்துமாவை நாம் காத்துக்கொள்ள வேண்டியதும், நம்முடைய (ஆவியின்) ஆளுகைக்குள் கொண்டு வரவேண்டியதும் அவசியம்.

## ஆத்துமாவை எப்படி காத்துக்கொள்வது?

> "நீங்கள் இந்தப் பிரபஞ்சத்திற்கு ஒத்த வேஷந்தரியாமல் தேவனுடைய நன்மையும், பிரியமும், பரிபூரணமான சித்தம் இன்னதென்று பகுத்தறியத்தக்கதாக உங்கள் மனம் புதிதாகிறதினாலே (renewing of your mind) மறுரூபமாகுங்கள்". (ரோ: 12:2)

இவ்வசனப்படி நாம் மறுரூபமடையவேண்டும். மகிமையின்மேல் மகிமை அடைந்து கர்த்தருடைய வருகையில் காணப்படவேண்டுமானால் நாம் மறுரூபமடைய வேண்டியதவசியம். இம் மறுரூபம் எப்படி அடைவது? மேற்கண்ட வசனப்படி "மனம் புதிதாக வேண்டும் (ஆத்துமா) இந்த ஆத்துமா புதிதாகக் கூடாதபடி 3 காரியங்களைக் கொண்டு பிசாசு தடையை கொண்டு வருகிறான்

> "ஏனெனில் மாம்சத்தின் இச்சையும்; கண்களின் இச்சையும்; ஜீவனத்தின் பெருமையுமாகிய உலகத்திலுள்ளவைகளெல்லாம் பிதாவினாலுண்டானவைகளல்ல அவைகள் உலகத்தினாலுண்டானவைகள்" (I யோ: 2:16)

இம்மூன்று காரியங்களான

a) **மாம்சத்தின் இச்சை:-** ஏவாளிடம் ஆதியில் பழத்தைக் காட்டி இது புசிப்பதற்கு ஏற்றது என்று மாம்ச இச்சையை தூண்டினான்.

b) **கண்களின் இச்சை:-** பழமானது பார்வைக்கு இன்பம் என்று கண்டாள் இது கண்களின் இச்சையாகும்.

c) **ஜீவனத்தின் பெருமை:-** புசிக்கும் நாளிலே தேவர்களைப்போல மாறுவீர்கள் என ஜீவிய பெருமையை தூண்டினான்.

இவ்வண்ணமே இன்றும் மகா கொடிய பாவங்களான இம் மூன்று காரியங்களிலும் விழும்படி யாவருக்கும் அவன் வலையை விரிக்கிறான். இம் மூன்றிலும் வெற்றியடைய வேண்டுமாயின் மனம் (ஆத்துமா) புதிதாக மாறவேண்டும். எப்படியும் ஆத்துமாவை கொஞ்சம் கொஞ்சமாக ஆவியின் ஆளுகைக்குள் கொண்டு வரவேண்டும். இதை எப்படிச் செய்ய முடியும் என பார்த்தால்

சங் : 119:9ல் ''வாலிபன் தன் வழியை எதினுல் சுத்தம் பண்ணுவான்? உமது வசனத்தின்படி தன்னைக் காத்துக் கொள்கிறதினுல் தானே'' எனக் குறிப்பிட்டிருக்கிறபடி தேவனுடைய வார்த்தைகளை ஏராளமாக உட்கொண்டால் சிந்தனைகளை சிறைப் பிடிக்க முடியும். உலகப்பிரகாரமான புஸ்தகங்களை ஏராளமாய்ப் படித்தால் ஆத்துமா முழுவதும் உலக சிந்தனைகளால் நிரம்பி வழியும், அதேசமயம் வேதத்தையும் ஆவிக்குரிய புத்தகங்களையும் வாசித்துக்கொண்டேயிருந்தால் உலகப் பிரகாரமான எண்ணங்களை ஜெயித்து ஆவிக்குரிய, ஆண்டவருக்குப் பிரியமான சிந்தனைகளால் நம் மனம் (ஆத்துமா) நிரம்பி வழியும். எனவே கர்த்தருடைய வார்த்தையினுலேயன்றி வேறெவ்விதத்திலும் மனம் புதிதாக்கப்படவே முடியாது. இப்படி புதிதாக்கப்பட்ட ஆத்துமா மறுரூபமடையுமாம்,

ஆத்துமா புதிதடையும்படி கர்த்தருடைய வசனம் எப்படிக் கிரியை செய்கிறது என்று கீழ்க்கண்ட வசனம் விளக்குகின்றது

''ஆதலால் விசுவாசம் கேள்வியினுலே வரும்
கேள்வி தேவனுடைய வசனத்தினுலே வரும்'' [ரோ: 10:17]
(Faith Cometh by hearing and hearing by the Word of God) வேதவசனங்களைக் கேட்கும்போது, அது ஆத்துமாவில் அனுதினமும் போகப் போக, கர்த்தருடைய சிந்தனையானது நம் ஆத்துமாவை நிறைத்து தேவனைக்குறித்த சிந்தனையினுல் முழுவதும் அடிமையாக்கி விடுகிறது. எனவேதான் யாக்கோபு தன்னுடைய நிருபத்தில் இவ்வாறு எழுதுகின்ருர் (யாக் ; 1 : 19)

''ஆகையால் என் பிரியமான சகோதரரே, யாவரும் கேட்கிறதற்கு தீவிரமாயும், பேசுகிறதற்குப் பொறுமையாயும், கோபிக்கிறதற்குத் தாமதமாயும் இருக்கக் கடவர்கள்''

எப்போதுமே வேதவசனங்களைக் கேட்க தீவிரமாய் இருக்க வேண்டும். ஏன் என்ருல் கேட்பதினுலே (by hearing) விசுவாசம் வரும். எங்கெல்லாம் வேதவசனம் போதிக்கப்படுகிறதோ அங்குச் செல்ல தீவிரமாயிருக்க வேண்டும். எப்போதுமே பரிசுத்தாவியினுல் நிறைந்து அபிஷேகம் பண்ணபட்டப் போதகர்களின் செய்திகளைக் கேட்க தீவிரமாயிருக்க வேண்டும். ஏனெனில் 2 விதமான செய்திகள் கொடுக்கப்படுகின்றன.

1) ஆத்துமாவினின்று கொடுக்கப்படும் செய்திகள் (Emotional or Intellectual preachings) கேட்பதற்கு இனிமையாயும், அழகாகவும் இருக்கும், ஆனால் ஆத்துமாவை மட்டுமே தொடும்.

2) பரிசுத்தாவியின் வல்லமையுடன் கொடுக்கப்படும் செய்திகள் (Spirit filled Messages) இது எப்போதுமே ஆவியை தொட்டு, தூண்டி அனல் மூட்டுவதாயிருக்கும்.

எப்போதுமே Emotional preachings, Emotion ஐ மட்டுமே தூண்டி விடும். அதன் பின்பு பலனற்றுப்போய் விடும். எனவே ஆவியினால் நிறைந்த செய்திகளைக் கேட்டு ஆவியின் துணையுடன் ஆத்துமாவை கட்டுப்படுத்தி வாழ்வதே ஆவிக்குரிய வாழ்வில் வெற்றியின் இரகசியமாகும்... ஆவிக்குரிய செய்திகளைக் கேட்கும் போது ஆத்துமா கட்டுப்படுத்தப்படுகின்றது. ஏனெனில் ''ஆசாரியனுடைய உதடுகள் அறிவைக் காக்கவேண்டும், வேதத்தை அவன் வாயிலே தேடுவார்களே'' (மல்: 2:7) என்று தேவ ஊழியர்களைப்பற்றி வேதமும் அழகாய்ப் போதிக்கின்றது.

# CHAPTER 4

## III சரீரம் (BODY)

சரீரம் என்பது உண்மையான மனிதன் அல்ல; வெளியான இம்மனிதன் புறம்பானதாகக் காணப்படுகின்றது. இதை விபரமாய்க் காணலாம்.

> "ஆனபடியினாலே நாங்கள் சோர்ந்து போகிறதில்லை எங்கள் புறம்பான மனுஷனானது அழிந்தும்; உள்ளான மனுஷனானது நாளுக்கு நாள் புதிதாக்கப்படுகிறது" (II கொ: 4:16)

புறம்பான மனுஷன் அல்லது மனுஷியைக் காணவேண்டுமானால் கண்ணாடியில் சென்று பார்த்தால் போதும், புறம்பான மனிதன் என ஒன்றை வேதம் குறிப்பிடுமானால் கண்டிப்பாக உள்ளான மனுஷன் என்று ஒன்று இருக்கவேண்டுமல்லவா? தொடர்ந்து புறம்பான மனிதனைப்பற்றி

> "பூமிக்குரிய கூடாரமாகிய நம்முடைய வீடு அழிந்து போனாலும் தேவனால் கட்டப்பட்ட கைவேலையல்லாத நித்திய வீடு பரலோகத்திலே நமக்கு உண்டென்று அறிந்திருக்கிறோம். ஏனெனில் இந்தக் கூடாரத்திலே நாம் தவித்து நம்முடைய பரம வாசஸ்தலத்தைத் தரித்துக் கொள்ள மிகவும் வாஞ்சையுள்ளவர்களாயிருக்கிறோம்" (II கொரி: 5: 1-2)

என்றும் வேதம் சொல்கிறது. இங்கே பூமிக்குரிய கூடாரமாகிய வீடு என்பது கைகளால் கட்டப் பட்ட வீடுகளையல்ல சரீரமாகிய கூடாரத்தையே இங்கு சொல்லப்படும் "கூடாரம்" என்ற வார்த்தையைக் கவனிக்க வேண்டும், கூடாரம் எப்போதுமே நிலையானதல்ல. ஆதி நாட்களில் முற்பிதாக்களெல்லாம் கூடாரங்களிலேயே தங்கினார்கள். நம்முடைய் ஆவியும் ஆத்துமாவும் தங்கியிருக்கிற கூடாரமே நம்முடைய சரீரம். இந்நிலையற்ற சரீரத்திற்காக என்னவெல்லாமோ செய்கின்றோம். என்றாவது நிச்சயம் ஒழியக் கூடியது என்பதை உணர்ந்து கொண்டால் இப்படிச் செய்ய மாட்டோம்.

ஆவி, ஆத்துமாவைப் போல இச்சரீரமும் முக்கியமானதே. இதையும் நாம் கட்டுப்படுத்த வேண்டும். இதில்தான் எல்லாக் காரியங்களுமே நடைபெறுகின்றன. பிசாசானவன் எப்போதுமே முதலில் இச்சைகளையும், பாவ எண்ணங்களையும் ஆத்துமாவில் தான் கொண்டு வருகின்றான். இந்நிலையிலேயே கர்த்தருடைய வசனத்தைக் கொண்டு ஜெயித்து விட்டால் பாவம் செய்ய மாட்டோம். பிசாசையும் ஜெயித்து விடுகிறோம். இல்லாவிட்டால் யாக்கோபு: 1:15 ன் படி

> "பின்பு இச்சையானது கர்ப்பந்தரித்து பாவத்தைப் பிறப்பிக்கும். பாவம் பூரணமாகும் போது மரணத்தைப் பிறப்பிக்கும்".

எப்படியென்றால் ஆத்துமாவில் ஏற்பட்ட பாவ எண்ணம், தனக்குக் கீழ் சரீரத்தைக் கொண்டு வந்து, சரீரமூலம் பாவக்கிரியையாக வெளிப்படுகின்றது. பாவம் பூரணமாகும் போது மரணத்தை உண்டுபண்ணுகிறது. பிசாசினுடைய முக்கியமான நோக்கமும், தந்திரமும் என்னவென்றால் எப்படியாவது சரீரத்தை தன்னுடைய ஆளுகைக்குள் கொண்டுவர வேண்டுமென்பதே. எனவே நாம் நம்முடைய சரீரத்தைப் பவுல் சொன்ன வண்ணம் கீழ்ப்படுத்தவேண்டும்.

> "மற்றவர்களுக்குப் பிரசங்கம் பண்ணுகிற நான்தானே ஆகாதவனாய்ப் போகாதபடிக்கு என் சரீரத்தை ஒடுக்கிக் கீழ்ப்படுத்துகிறேன்" (I கொ : 9:27)

சரீரத்தை ஒடுக்குவது என்பது கூனிக் குறுகி வளைவது அல்ல. இச்சைகளை அடக்கி கீழ்ப்படுத்துவதேயாகும். அல்லது சரீரத்தை மனிதன் எண்ணங்களின்படி விட்டு விடாமல் ஆவியின் ஆளுகைக்குள் கொண்டு வருவதேயாகும்.

## சரீரத்தை எப்படி ஆவியின் ஆளுகைக்குள் கொண்டு வருவது ?

> "அப்படியிருக்கச் சகோதரரே நீங்கள் உங்கள் சரீரங்களைப் பரிசுத்தமும் தேவனுக்குப் பிரியமுமான ஜீவ பலியாக ஒப்புக் கொடுக்க வேண்டுமென்று தேவனுடைய இரக்கங்களை முன்னிட்டு உங்களை வேண்டிக்கொள்ளுகிறேன். இதுவே நீங்கள் செய்யத் தக்க புத்தியுள்ள ஆராதனை" (ரோமர்: 12:1)

மேற்கண்ட வசனப்படி நமது சரீரத்தை 2 காரியங்களுக்கு ஒப்புக் கொடுக்கவேண்டும்.

a) பரிசுத்தத்திற்கு b) ஜீவபலியாக

இதைச்செய்ய வேண்டியது நாம்தான். ஜீவபலியாக ஒப்புக் கொடுத்தபின் அது ஒருபோதும் திரும்பி எழுந்து ஓடாது. ஒப்புவித்த இடத்தில்தானே அமர்ந்திருக்குமல்லவா? பிசாசானவன் ஆத்துமாவிலே எண்ணங்களை உருவாக்கி அதைச் சரீரம் மூலம் துர்க்கிரியையாக வெளிப்படுத்தி சரீரத்தை தனது கட்டுக்குள் கொண்டு வர முயற்சிக்கும் போது அதேசமயம் இரட்சிக்கப்பட்டு விடுதலை செய்யப்பட்ட ஆவியுடன் வாசம் செய்யும் பரிசுத்தாவியானவரும் துர்க்கிரியை வெளிப்படாதபடி சரீரத்தை தனது ஆளுகைக்குள் கொண்டு வர முயலுகிறார். இதையே பவுல் கலாத்தியர்: 5:17 ல்

"மாம்சம் ஆவிக்கு விரோதமாகவும். ஆவி மாம்சத்துக்கு விரோதமாகவும் இச்சிக்கிறது" என்று எழுதுகிறார்.

எனவேதான் நமது சரீரத்தை பரிசுத்தத்துக்கும்; ஜீவபலியாகவும் ஒப்புக்கொடுத்ததை நினைவு கூர்ந்து I கொ: 9:27 ன் படி ஆகாதவனாய்ப் போகாதபடிக்கு நம்முடைய சரீரத்தை ஒடுக்கி கீழ்ப்படுத்த வேண்டும்.

"ஆவிக்கேற்றபடி நடந்துகொள்ளுங்கள். அப்பொழுது மாம்ச இச்சையை நிறைவேற்றாதிருப்பீர்கள்" (கலா: 5:16)

நாம் ஆவியினாலே பிழைத்திருந்தால் ஆவிக்கேற்றபடி நடக்கவும் கடவோம்" (கலா: 5:25)

"ஆகையால் சகோதரரே, மாம்சத்தின்படி பிழைப்பதற்கு நாம் மாம்சத்துக்கு கடனாளிகளல்ல; மாம்சத்தின்படி பிழைத்தால் சாவீர்கள்; ஆவியினாலே சரீரத்தின் செய்கைகளை அழித்தால் பிழைப்பீர்கள்" (ரோ: 8:12-13)

"கிறிஸ்துவினுடையவர்கள் தங்கள் மாம்சத்தையும் அதின் ஆசை இச்சைகளையும் சிலுவையில் அறைந்திருக்கிறார்கள்" (கலா: 5:24)

"மாம்சத்துக்குட்பட்டவர்கள் தேவனுக்குப் பிரியமாயிருக்க மாட்டார்கள்" (ரோ: 8:8)

"தேவனுடைய ஆவி உங்களில் வாசமாயிருந்தால் நீங்கள் மாம்சத்துக்குட்பட்டவர்களாயிராமல் ஆவிக்குட்பட்டவர்களாயிருப்பீர்கள்". (ரோ: 8:9)

மேற்கண்ட வேத வசனங்கள் ஆத்துமாவின் எண்ணங்களுக்கல்ல; பரிசுத்த ஆவியானவரின் ஆளுகைக்கு அடங்கி, சரீரத்தை பிசாசின் ஆளுகையினின்று தப்புவிக்க முடியும் என திட்டமாய் போதிக்கின்றன அல்லவா? எப்போதுமே ஆத்தும எண்ணங்கட்கு (Emotional) கட்டுப்படக் கூடாது. இதை ஸ்மித் விக்கிள்ஸ்வொர்த்

"நான் காண்கிறவைகளினாலே உணர்ச்சி வசப்படுகிறதில்லை, நான் உணருகிறவைகளினாலேயும் உணர்ச்சி வசப்படுகிறதில்லை. ஆனால் நான் விசுவாசிக்கிறவைகளாலே அசைக்கப்படுகிறேன்; உணர்ச்சி வசப்படுகிறேன்" என்கிறார்.

உணர்ச்சி வசப்படுதல் (Emotional) என்பது மிகவும் ஆபத்தான காரியம். இப்படி உணர்ச்சி வசப்படுவோரை பிசாசு எளிதில் ஏமாற்றி விடுகின்றான்

## கருப்பு நாயும் வெள்ளை நாயும்

நமக்குள் எப்போதுமே இரண்டு விதமான போராட்டங்கள் நடந்துகொண்டேயிருக்கிறது. உதாரணமாக நம் வீட்டில் ஒரு வெள்ளைநாயும், கருப்பு நாயும் உள்ளது. இதில் வெள்ளை நாய்க்கு நல்ல சாப்பாடு கொடுப்போம். கருப்பு நாய்க்கு ஒன்றுமே கொடுக்காமல் ஒரு வாரம் கழித்து இரண்டையும் சண்டையிட விட்டால் கருப்பு நாய் தோற்றுப்போகும் என்று நான் எழுதாமல் நீங்களே சொல்லிவிடுவீர்களல்லவா? அப்படியே ஆவிக்குரிய காரியங்களை அதிகமாக உட்கொண்டோமானால் விரைவில் ஆவி பெலனடைந்து, ஆத்தும வல்லமையை மேற்கொள்ளும். அதேசமயம் வெள்ளை நாயைப் பட்டினி போட்டு கருப்பு நாயைக் கொழுக்க வைத்தால் வெள்ளை நாய் தோற்றுப் போகுமல்லவா? அப்படியே ஆத்தும எண்ணங்கட்கு கீழ்ப்படிந்து அசுத்த எண்ணங்கள்; ஆபாச புத்தகங்கள்; உலகக்காரியங்களையே உட்கொண்டோமானால் ஆத்தும வல்லமை மேற்கொண்டு ஆவியை தோற்கடிக்கச் செய்யும். ஆவிக்குரிய பெலனையிழந்து ஆத்துமாவின் கட்டுக்குள் வந்துவிட்டால் முன்னிலைமையை விட பின்னிலைமை மோசமாகி விடுகின்றது. எனவே உணர்ச்சி (Emotion) சம்மந்தப்பட்ட காரியங்களில் கவனமாயிருக்கவேண்டும்.

****

## CHAPTER 5

### பரிசுத்த ஆவியின் அபிஷேகம்

இன்று பரிசுத்தாவியின் அபிஷேகம் என்ருலே அனேகருக்குப் புரிவதில்லை. எனவே ஏமாற்றமடைந்து குழம்பித் தவித்து பிறரையும் குழப்பிவிடுகின்றனர்.

அதை எப்படிப்பெற்றுக் கொள்ளவேண்டும்?
ஏன் பெற்றுகொள்ள வேண்டும்?
பெற்றுக்கொண்டால் என்ன நடக்கிறது?

என்பதைப் புரிந்து கொண்டால் நிச்சயம் ஆசீர்வாதமாயிருக்கும்.

உதாரணமாக நம் வீட்டுக்கு விருந்தினர் ஒருவர் வரும்போது அவரை முன்னறையிலேயே அமரவைத்துப் பேசி, உபசரித்து அனுப்பிவிடுவோம். ஆனல் அதே நபர் உறவினராகவோ; குடும்பத்தினராகவோ இருப்பாரேயானல் வீட்டினுடைய எப்பகுதியையும் உரிமையுடன் சென்று அனுபவிப்பாரல்லவா? அவ்வண்ணமே நாம் இரட்சிக்கப்படும்பொழுது பரிசுத்த ஆவியானவரின் கிரியையின் மூலமாகவேதான் என்ருலும் அபிஷேகம் என்பது தனிப்பட்ட அனுபவமாகும். அந்த அபிஷேகத்தைப் பெறும்போது ஆவியானவர் நம்முடைய ஆவியின் முழுப்பகுதியையும் ஆட்கொண்டு உரிமைப்படுத்தகிருர். இதையே: எசேக்கியேல்: 36:27 ல் "உங்கள் உள்ளத்திலே என் ஆவியை வைத்து" (Innerman) என்று சொல்லப்பட்டுள்ளது. எனவே அபிஷேகம் பெற்றுக்கொள்ளும்போது நம்முடைய ஆவியானது முற்றும் பரிசுத்தாவியானவரால் நிரப்பப்பட்டு அவரால் ஆட்கொள்ளப்படுகிறது. அப்படி நிரம்பி வழியும்போது பரிசுத்தாவியானவரின் வல்லமையானது, ஆத்துமாவையும், சரீரத்தையும் அடக்கி மேற்கொள்ளுகின்றது. இதன் பின்பு சரீரம் ஆவியானவரின் கட்டளைப்படி நடக்கத் துவங்கும் இதையே ரோமர்: 8:14 ல்

"மேலும் எவர்கள் தேவனுடைய ஆவியினுலே நடத்தப்படுகிருர்களோ அவர்கள் தேவனுடைய புத்திரராயிருக்கிருர்கள்"

என்று அழகாக எழுதப்பட்டுள்ளது. எனவே தேவனுடைய ஆவியினல் நடத்தப்படுகிற ஜீவியம் வேண்டுமானல் பரிசுத்த ஆவியின் அபிஷேகம் முதலாவது வேண்டும்.

**பாத்திரம் நிரம்பி வழிதல்:-** தாவீது இராஜா சொல்கிறார்

> "என் தலையை எண்ணெயால் அபிஷேகம் பண்ணுகிறீர் என் பாத்திரம் நிரம்பி வழிகிறது" (சங்: 23:5)

எண்ணெய் என்பது பரிசுத்தாவியானவருக்கு அடையாளம். பரிசுத்த ஆவியால் நிரப்பப்படும்போது நிரம்பி வழிகிற அனுபவத்தை நிச்சயம் ஒவ்வொருவரும் அனுபவிக்கமுடியும். இதை திட்டமாய் அறிய அப்போஸ்தலர் 2 வது அதிகாரத்தை எடுத்துக் கொள்ளுவோம். சீஷர்கள் முதன் முதலாக அபிஷேகம் பண்ணப் படுகின்றனர். நடந்தது என்ன ?

> அவர்களெல்லாரும் பரிசுத்த ஆவியினாலே நிரப்பப்பட்டு ஆவியானவர் தங்களுக்கு தந்தருளின வரத்தின்படியே வெவ்வேறு பாஷைகளில் பேசத்தொடங்கினார்கள்" (அப்: 2:4)

முதலாவது பரிசுத்தாவியினாலே நிரப்பப்பட்டார்கள். இரண்டாவது ஆவியானவர் தந்தருளின வரத்தின்படியே ... இதில் தமிழில் வரத்தின்படியே என்றிருப்பது ஆங்கிலத்தில் "As the Spirit gave them utterance" என்றிருக்கிறது. அதாவது ஆவியானவர் தந்தருளின **வார்த்தையின்படியே** வெவ்வேறு பாஷைகளில் பேசத் தொடங்கினார்கள். ஆவியானவரால் நிறைந்திருக்கும் போது மட்டுமே

> "இருதயத்தின் நிறைவினால் வாய்பேசும்" (மத்: 12:34)

என்ற வசனப்படி ஆவியானவர் தருகிற வார்த்தைகளைப் பேசவேண்டும். இன்று சிலர் பேசவேண்டியது ஆவியானவர் என்று தவறாக எண்ணிக்கொண்டு அமைதியாயிருந்து ஏமாந்து சோர்ந்து விடுவதுடன் மெய்யான சத்தியத்தையும் மறுதலிக்கத் துவங்கிவிடுகின்றனர். பேசவேண்டியது ஆவியானவரல்ல, நாம் தான் பேசவேண்டும். தைரியமாக வாயைத் திறந்து பேசத் துவங்கும்போது அந்நிய பாஷைகளைப் பேச முடியும்.

ஒரு சமயம் எங்கள் வேதாகமப் பள்ளி மாணவர்களுடன் உபவாச ஜெபத்துக்குச் சென்றிருந்தோம். ஒரு சகோதரன் அபிஷேகம் பெற்று, அந்நிய பாஷைகளைப் பேசுவதற்காக ஜெபிக்கத்துவங்கினோம். முதுகில், தலையில், வாயில், வயிற்றில் எல்லாம்

கைவைத்து உற்சாகமாக ஜெபித்தோம். அவரோ வாயைத் திறப்பதாக இல்லை முடிவில் தோ ... தோ என்று மட்டும் சொல்லிக்கொண்டேயிருந்தார். எல்லோரும் சோர்ந்து போய் படுத்துவிட்டோம். சற்று நேரம் கழித்து உற்சாகமான எமது மாணவர் ஒருவர் நான் போய் அவருக்காக ஜெபிக்கப் போகிறேன் என்று சொல்லி அவரை இழுத்துக்கொண்டுபோய் உற்சாகமாக ஜெபிக்கத் துவங்கினர். ஆன மட்டும் போராடிவிட்டு முடிவில் அட வாயைத் திறய்யா... உனக்கு அபிஷேகமும் கிடையாது அந்நிய பாஷையும் கிடையாது'' என்று சொல்லி விட்டு வந்து வாயைத் திறவாத இவனுக்கு அபிஷேகம் கிடைக்காது என்று எங்களிடம் வந்து சொன்னபோது இப்போது நீங்கள் சிரிப்பது போலவேதான் நாங்களும் சிரித்தோம். அன்பானவர்களே! அபிஷேகம் பெற ஆசை, அந்நியபாஷை பேசவும் வாஞ்சை, வாயை மூடிக்கொண்டால் யார் பேச முடியும்? தைரியமாக வாயைத் திறந்து பேச வேண்டியதுதானே!

''உன் வாயை விரிவாய்த் திற, நான் அதை நிரப்புவேன்''
(சங்: 81:10 ல்)

என்று சொன்ன ஆண்டவர் மனம் மாற மனுஷனல்லவே.

ஆவியானவரால் நிரப்பப்படும் போது உள்ளத்தில் அவர் தருகிற வார்த்தைகளை பயமின்றி தைரியமாக பேச வேண்டும். அது எப்படிப்பட்டதாயினும் ''ஐயோ என்னவோ புரியவில்லையே'' என்றெண்ணி அமைதியாகி விடக்கூடாது. புரியாதபடியால் தான் அதன் பெயர் ''அந்நியபாஷை''. புரிந்து கொள்ளுவோமானல் அது அந்நிய பாஷையல்லவே! உதாரணமாக வாசிக்கிற உங்களுக்கு ''பர்மீய'' மொழி தெரியுமென வைத்துக்கொள்வோம். உங்களுக்கு அது அந்நிய பாஷையல்ல எனக்கு அது அந்நிய பாஷையல்லவா? இப்புத்தகத்தை தமிழில் வாசிக்கிற உங்களுக்கு இது அந்நிய பாஷை இல்லையல்லவா? எனவே அந்நிய பாஷை பேசுகிற ஒருவர் எனக்குப் புரியவில்லையே என தயங்க வேண்டியதில்லை. இவ்விஷயத்தில் தவருன விளக்கங்களைக் கேட்டு குழம்பி விடக்கூடாது.

''அந்நிய பாஷையினுலே இந்த ஜனத்தோடே பேசுவார்''
(ஏசா: 28:11)

என்று வேதவசனம் அழகாய்ச் சொல்லுகிறது.

ஆவியானவரால் நிரப்பப்படும் போது சரீரமும், ஆத்து மாவும் ஆவியின் கட்டுப்பாட்டிற்குள்ளடங்கி சரீரம் (வாய்) ஆவியானவர் தரும் வார்த்தைகளை தைரியமாய் பேசுகின்றது. இதை வாசிக்கும் அன்பான நேயரே ! கடைசியாக சில வார்த் தைகளை சொல்லுகிறேன் அந்நிய பாஷை என்பது மனிதனல்ல தேவனே கொடுப்பதாகும். இது ஆத்துமாவையும், ஆவியையும், சரீரத்தையும் இளைப்பாறப்பண்ணும் தெய்வீக மாமருந்தாகும். சில சமயங்களில் எப்பக்கத்திலும் நெருக்கப்பட்டு சோர்வுறும் போது அமைதியாய் தேவ ஆவியில் நிரம்பி அந்நிய பாஷைகளைப் பேசும் போது அனுபவிக்கிற அந்தத் தெய்வீக சமாதானத்தை; ஆத்மீக இன்பத்தை எப்படி வார்த்தைகளால் வருணிப்பது என்று புரியவில்லை. இதை அனுபவிக்கிறவர்கள் தான் உணர முடியும். சங்: *34:8* ல் சொல்லியுள்ளபடி

"கர்த்தர் நல்லவர் என்பதை ருசித்துப் பாருங்கள்"

**பரிசுத்தாவியின்மூலம் வெற்றிகரமான ஜெப ஜீவியம்:-**

"என்னத்தினாலெனில், நான் அந்நிய பாஷையிலே விண்ணப்பம் பண்ணினால், என் ஆவி விண்ணப்பம் பண் ணுமே யன்றி" (I கொரி: *14:14*)

இவ்வசனம் மூலம் அந்நிய பாஷைகளைப் பேசி ஜெபம் பண்ணும் போது நம் சரீரமும், ஆத்துமாவும் ஆவிக்கு கீழடங்கிவிடுகின்றது, இதுவே வெற்றிகரமான கிறிஸ்தவ வாழ்வின் எளிதான. ரகசியம்

"அந்தப்படியே ஆவியானவரும் நமது பலவீனங்களில் நமக்கு உதவி செய்கிறார். நாம் ஏற்றபடி வேண்டிக் கொள்ளவேண்டிய தின்னதென்று அறியாமலிருக்கிறபடியால் ஆவியானவர்தாமே வாக்குக்கடங்காத பெருமூச்சுகளோடு நமக்காக வேண்டுதல். செய்கிறார். (ரோமர்: *8:26*)

எனவே ஆவியில் நிறைந்து, அந்நிய பாஷைகளைப் பேசி ஜெபிப்பது முக்கியமானது என்பதை திட்டமாய் உணரவேண்டும்.

யோ: *1:12*ன் படி இயேசுவை விசுவாசித்து ஏற்றுக் கொண்டு இரட்சிக்கப்படும்போது தேவனுடைய பிள்ளை

களாகின்றோம். ஆனால் ரோ : 8 : 14ன் படி ஆவியான வரால் நடத்தப்படும் போது புத்திரராகிறோம். பிள்ளையாயிருக்கின்ற இளம் அனுபவத்தின்று புத்திரர் எனப் படும் முதிர்ந்த அனுபவம் பெற ஆவியானவரால் நடத் தப்படுகிற அளவு ஆவிக்குரிய வாழ்வில் வளர கவனமா யிருக்கவேண்டும்.

எச்சரிக்கை:- ஆவியினால் நிரப்பப்படுகிறபோது மிகவும் கவனமாகவும் இருக்கவேண்டும். பரிசுத்தாவியானவர் நமது ஆவியை முற்றும் நிரப்பும் வரை அமைதியாயிருப்பது அவசியம். அவசரப்பட்டு, உணர்ச்சி வசப்பட்டு கிரியை செய்யத் துவங்கு வோமானால் அது ஆபத்தில் முடியும். சில சமயங்களில் வேகமாக கைகொட்டுவது; வேகமாக ட்ரம் அடிப்பது போன்றவற்றின் மூலம் ஆவியில் நிரம்புகிறோம் ''என்போமேயானால் அது உணர்ச்சியைத் (Emotion) தூண்டி விடும். அப்படிப்பட்ட நிரப்புதல் பரிசுத்தாவி யானவரின் கிரியையல்ல. எனவே ஆவிக்குரிய காரியங்களில் (Emotion) ஐக்குறித்து மிகவும் எச்சரிக்கையாயிருப்பதவசியம்.

இன்னும் சில சமயங்களில் ஆவியினால் நிரம்பும் சிலர் அளவுக்கு மீறி; கட்டுப்பாட்டையிழந்து விடுகின்றனர். இதுவும் அவ்வளவு தூரம் நல்லதல்ல ஏனென்றால் :-

> ''தீர்க்க தரிசிகளுடைய ஆவிகள் தீர்க்கதரிசிகளுக்கு அடங்கி யிருக்கிறதே!'' ( I கொ : 14 : 32 )
>
> ''தேவன் கலகத்திற்கு தேவனாயிராமல், சமாதானத்திற்குத் தேவனாயிருக்கிறார். பரிசுத்தவான்களுடைய சபைகளெல் லாவிற்றிலேயும் அப்படியே இருக்கிறது ( I கொ : 14 : 33 )
>
> ''தன் ஆவியை அடக்காத மனுஷன் மதிலிடிந்த பாழான பட்டணம் போலிருக்கிறான்'' ( நீதி : 25 : 28 )

எப்போதுமே பரிசுத்தாவியானவர் நம்முடைய ஆவியுடனே கூட ஒத்துப்போய்தான் எக்காரியத்தையும் நடத்துகின்றார். நாம் இணங்கிப் போகின்ற அளவே அவர் நம்மூலம் கிரியை செய்ய முடியும். எனவே Emotional ஆக செய்யப்படுகிறவை நம்மை

மட்டுமின்றி பிறரையும் பாதிக்கக்கூடியவை. Emotionalல் யாவையும் செய்து முடித்தபின் திருப்தியற்ற நிலையிலேயே திரும்பிச் சென்று உன்னத அனுபவங்களை இழந்து விடுகின்றனர். மேலும் ஆவியில் நிறைந்திருக்கும் போது சரீரத்தை அங்குமிங்கும் ஆடிச்சாடவிடாமல் கட்டுப்படுத்திக் காத்திருந்தோமானால் தேவனிடத்திலிருந்து எளிதில் செய்திகளைப்பெற முடியும். இதைப்பற்றிப்பின்னர் படிக்கலாம்.

உணர்ச்சிகள் (Emotion) மூலம் பிசாசு
ஆட்கொள்ளும் விதம் :-

அமெரிக்காவில் கென்னத் ஹேகின் (Kenneth Hagin) என்றொரு தீர்க்கதரிசி இருக்கிறார். அவர் தான் கண்ட தரிசனத்தை அவர் கீழ்க்கண்டவாறு சொல்கிறார். ஒரு பாஸ்டருடைய மனைவி நன்கு அழகுள்ளவள் அபிஷேகமும் பெற்றவள். ஒரு சமயம் கண்ணாடியில் தன்னைப் பார்த்த போது பிசாசு மெதுவாய் வந்து ''நீ எவ்வளவு அழகாயிருக்கிறாய்'' என்றான். அந்த அம்மா அப்பாலே போ சாத்தானே'' என்று கூறி ஜெயம் எடுத்து விட்டார்கள். இன்னொரு நாள் அதே வண்ணம் பிசாசு சொன்னபோதும் ஜெயம் எடுத்தார்கள். சில காலம் கழித்து மெதுவாக உண்மையில் அழகாகத்தானே இருக்கிறேன் என்றெண்ணினார்கள். உடனே அவர்கள் ஆத்துமாவில் கரும் புள்ளிபோல பிசாசு நுழைந்து கொண்டான். மெதுவாக நீ இந்தப் பாஸ்டருக்கு கட்டுப்பட்டு வாழ்வதை விடவெளியுலகிற்கு வந்தால் பேரும் புகழும் பெற்றுவிடலாமே என்று ஆத்துமாவில் எண்ணங்களை தூண்டினான். அவளும் அதை கொஞ்சம் கொஞ்சமாய் ஏற்றுக்கொண்டு பாஸ்டரைவிட்டு விலகி துரோகம்பண்ணி பாவங்களில் ஈடுபட்டு பலருடன் வாழ ஆரம்பித்தாள். தொடர்ந்து மரணத்துக் கேதுவான பாவங்களைச் செய்ததுடன் ''இனி எனக்கு இயேசுக் கிறிஸ்து வேண்டியதில்லை'' என்றாள் இப்போது அவள் முற்றும் தன்னை பிசாசுக்கு விற்றுப் போட்டாள்.

நம்முடைய வாழ்க்கையிலும் அனேக சமயங்களில் பிசாசு எண்ணங்களைக் கொண்டு வரும் போதெல்லாம்.

நீ அழகாக இருக்கிறுய்
உனக்கு அந்தஸ்து இருக்கிறது
உனக்கு புகழ் இருக்கிறது
உனக்கு படிப்பு இருக்கிறது

நீ நல்லவன் இப்படிப்பட்ட எண்ணங்களைக் கொண்டு வரும்போ தெல்லாம் பிசாசைக் கடிந்து கொண்டு அப்போஸ்தலனுகிய பவுலைப்போல ''பாவிகளில் பிரதான பாவி நான்—இனி நானல்ல கிறிஸ்துவே என்னில் ஜீவிக்கிறுர்-கிறிஸ்துவுடன் சிலுவையிலறைய பட்டேன்'' என்று தாழ்மையுடன் அறிக்கையிடும் போது பிசாசு வெட்கப் பட்டு மரண அடி வாங்கி நம்மை விட்டு ஓடிப் போவான்.

பிசாசு நம்மிடம் என்ன என்ன இருக்கிறது என்று பெருமை யாகச் சொல்வாளுல் உடனே ''இவையெல்லாம் கொடுத்த கர்த்தருக்கு ஸ்தோத்திரம்'' என்று சொல்லுங்கள். ஒரு அழகான பெண்ணைப்பார்த்தவுடன் இவள் என்ன அழகு பார்த்தாயா? என்பான் பிசாசு. உடனே இப்பெண்ணுக்கு இவ்வழகைத்தந்த தேவனுக்கு ஸ்தோத்திரம் என்று சொல்வோமானுல் இச்சையான எண்ணங்கள் மூலம் ஆத்துமாவைப் பிடிக்க முயலும் பிசாசு தோற்பான். நாமும் ''நான் நிற்பது கிருபையினுல்'' என்று அறிக்கையிட முடியும்.

''பிசாசுக்கு எதிர்த்து நில்லுங்கள். அப்பொழுது அவன் உங்களை விட்டு ஓடிப்போவான்'' -யாக் : 4 :7.
''பிசாசுக்கு இடங்கொடாமலும் இருங்கள்''-எபே : 4 :27

★
★★
★★★

# CHAPTER 5

## ஆத்துமாவில் மறைந்திருக்கிற வல்லமை :-

ஆதியில் மனிதன் சிருஷ்டிக்கப்பட்டபோது அவன் ஆத்துமாவில் வல்லமையும்; மிகுந்த ஞானமும் உள்ளவனாக உருவாக்கினார் என ஆரம்பத்திலேயே படித்தோம், விசேஷமாக அவ்வளவு பெரிய ஏதேனை ஆண்டு கொள்ளும் மகத்துவ வல்லமையைப் பெற்றிருந்தான். ஆனால் மனிதன் பாவம் செய்த போது அந்த வல்லமை கட்டப்பட்டுப் போயிற்று. ஒருவன் இரட்சிக்கப்பட்ட பின்பு இனி அவ்வல்லமைக்கு எவ்வித தேவையு மில்லையல்லவா? ஏனென்றால் ஆதாமுக்குப் பின்னர் மனிதனுக்கு அவ்வல்லமையின் தேவையில்லாத நிலைமையிலேயே மனிதனை தேவன் வைத்துள்ளார்.

ஆரம்பத்தில் ஆதாம் மிகுந்த வல்லமையுள்ளவனாகவும்; மிகுந்த அறிவும் (Memory Power) உடையவனாக இருந்தானே? இப்போது அவ்வல்லமை தேவையில்லையா என்போமேயானால்

**தேவன் ஆத்தும வல்லமையின் மூலம் கிரியை செய்பவரல்ல: அவர் ஆவியாயிருக்கிறார் . . . ஆவியின் வல்லமை மூலமே அவர் கிரியை செய்கிறவர். இப்படி கிரியை செய்யும் படிக்கு மனிதனில் ஆவியாகிய ஒரு தீபத்தை வைத்திருக்கிறார்**

*(நீதி : 20 : 27)*

> ''நாம் தேவனுடைய பிள்ளைகளாயிருக்கிறோமென்று ஆவியானவர் தாமே நம்முடை ஆவியுடனே கூட சாட்சி கொடுக்கிறார்'' (ரோ : 8 : 16)

எனவே தேவன் ஆத்தும வல்லமையினாலல்ல, நம்முடைய ஆவியுடனே கூட பரிசுத்தாவியானவரை தங்கவைத்து தாம் விரும்பும் காரியங்களை ஆவியில் வல்லமையுடன் இன்றும் நடத்தி வருகின்றார்... ஆண்டவருக்கு ஆத்தும வல்லமை (Soul Power) அவசியமேயில்லை.

மற்ற மதங்கள், இயக்கங்களைவிட கிறிஸ்தவத்தின் மேலான அடிப்படை ''ஆவியின் வல்லமையே''. மற்ற மதங்களோ ஆத்தும வல்லமையை அடிப்படையாக கொண்டவை. ஆத்தும வல்லமை (Soul Power) எனப்படுவது MESMERIZM; HYPNOTIZM (மெஸ்மரிசம்; ஹிப்னாடிசம்) எனப்படுகின்றன. இதைக்கொண்டு மனிதனின் மனதின் எண்ணங்களை அறிவதும்; அற்புத அடையாளங்களைச் செய்வதும் TELEPATHY (டெலபாதி) என்றழைக்கப்படும் இவற்றையே அடிப்படையாக கொண்டவை. மேற்கண்ட யாவும் மனிதன் பாவம் செய்த போது கட்டப்பட்ட or இழந்து போன ஆத்தும வல்லமையை வெளிப்படுத்திக்கொண்டு வர செய்யப்படும் மனித முயற்சிகளேயாகும்.

மெஸ்மரிசம் :- 1778-ம் வருடம் MESMER (மெஸ்மர்) என்ற ஒரு மனிதன் ஒரு புதுவிதமான சக்தியை கண்டு பிடித்தான், மறைந்து கிடக்கிற ஆத்தும வல்லமையை மனதைக்கட்டுப்படுத்தி, பலவித வழிமுறைகள் மூலம் ஆத்தும வல்லமையை கிரியைச் செய்ய வைக்கும் முறையைக்கண்டறிந்தான். எனவேதான், அவனுடைய பெயரிலேயே மெஸ்மரிசம் அல்லது ஹிப்னாடிசம் எனப்படுகிறது. இவ்வழியின்படி ஒரு மனிதனை.

(a) அவன் சுயசக்தியை இழக்கப் பண்ணலாம்

(b) மனிதனை தூங்கும் நிலைக்கு கொண்டு வந்து நாம் கட்டளையிடும் யாவையும் செய்யப் பண்ணலாம்

இதையே இன்றும் சாலையோரங்களில் கொட்டாங்கச்சி போன்றவற்றை வைத்துக்கொண்டு வித்தைகள் காட்டுவதுபோல பண்ணி மனதின் எண்ணங்களை கூறுவதும்; ஒருவனை நாற்காலியில் படுக்கவைத்து துணியால்மூடி விட்டு வந்திருக்கும் நபருடைய காரியங்களை அறிவித்து காசு சம்பாதிப்பதை சாதாரணமாகக் காணமுடியும்.

ஒரு சமயம் இப்படிப்பட்ட காரியங்களைச் செய்பவன் ஒருவன் தன்னைச் சுற்றி நின்றவர்களில் ஒரு சிறுவனைப் பார்த்து ''இங்கேவா'' என்றான். சிறுவன் வர மாட்டேன் என்றான், உடனே வித்தைக்காரன் ''வராவிட்டால் இரத்தம் கக்கிச் சாவாய்'' என்றதும் பையன் பயந்து போய் ஓடி வந்தான்.

அருகில் வந்ததும் இங்கே தரையில் ஏதோ சப்தம் கேட்கிறதே என்னவென்று கேள் என்ருன். சிறுவன் காதைவைத்து கேட்டுவிட்டு எழும்ப முயன்றதும் காது தரையோடே ஒட்டிக்கொண்டது. பையன் "ஐயோ ஐயோ" என்றலறினுன். இது எந்த வல்லமையினுல் செய்யப்பட்டது? இதுவே "ஆத்துமசக்தி".

இந்த மெஸ்மரிச or ஹிப்னுடிச சக்தியினுல்

(a) ஒரு பொருளை அப்படியே உயர்த்த முடியும்

(b) ஒரு மனிதனைப் பார்த்த நிலையிலேயே அவனை தூங்கச் செய்யலாம்

(c) ஒருவனின் மனதில் என்ன நினைக்கிருன் என்று சொல்லுதல்

(d) மரித்துப் போனவர்களிடம் பேசுதல்

(e) கூடு விட்டு கூடு பாயுதல்

இன்னும் இவை போன்ற மயிர்க்கூச் செறியச் செய்யும் காரியங்களைச் செய்து கொண்டிருக்கின்றனர்.

இதன் பின்பு 1784-ல் மெஸ்மரினுடைய சீஷர்கள் மெஸ்மரிச வல்லமையுடனேகூட இன்னுென்றையும் கண்டு பிடித்தனர். அதுவே டெலப்பதி (TELEPATHY) என்று அழைக்கப்படுவது. இதன் மூலம் "மனிதனின் எண்ணங்களுடன் உறவாடுதல்" அதாவது எவ்வளவு தூரத்திலுள்ள மனிதனுடனும் நாம் இருக்கிற இடத்திலிருந்தே தியானம் மூலம் நம் ஆத்தும வல்லமையை வெளிப்படுத்தி அம்மனிதனுடன் தொடர்புகொள்ள முடியும் இதினின்று நியுராலஜி (Neorology)

சைக்கோமெட்ரி (Cycometry)
போன்ற பல காரியங்கள் வெளிவரத்துவங்கின.

மனிதன் பாவம் செய்தபின்பும் அவனுடைய ஆத்தும வல்லமையை அவர் அழிக்காதபடியினுலே பிசாசு இப்படிப்பட்ட தவருன வழிகள் மூலம் அவ்வல்லமையை வெளிப்படச் செய்து தேவனுடைய ஆவியின் வல்லமைக்கு ஒரு மாற்று வல்லமை or Duplicate ஆக பயன்படுத்தி வருகின்ருன். எப்போதுமே தேவன் என்னென்ன செய்கிருரோ உடனே ஒரு Duplicate ஐ பிசாசும்

உருவாக்கி ஜனங்களை வழிதவறப் பண்ணுவான். (உதாரணமாகத் "தங்கம்" ஒன்று உண்டானால் அதைப்போல் "ரோல்டு கோல்டு" ஒன்று இருக்கும்) இதைக்குறித்து எச்சரிக்கையாயிருக்க வேண்டும். ஏனென்றால்

> "நசரேயனாகிய இயேசுவைத் தேவன் பரிசுத்தாவியினாலும் வல்லமையினாலும் அபிஷேகம் பண்ணினார்; தேவன் அவருடனேகூட இருந்தபடியினாலே அவர் நன்மை செய்கிறவராயும்; பிசாசின் வல்லமையில் அகப்பட்ட யாவரையும் கணமாக்குகிறவராயும் சுற்றித்திரிந்தார்" *(அப் : 10 : 38)*

ஆண்டவராகிய இயேசு ஆத்தும வல்லமையினாலல்ல ஆவியின் வல்லமையினால் தான் ஊழியம் செய்து கிரியை நடப்பித்தார் என்று மேற்கண்ட வசனம் நிரூபிக்கிறதல்லவா? அந்த இயேசு தம் அடியாரைப் பார்த்து சொன்னதும் அதையே அல்லவா?

> "பரிசுத்த ஆவி உங்களிடத்தில் வரும் போது நீங்கள் பெலனடைந்து (சர்வ வல்லமையடைந்து" *(அப் : 1 : 8)*

எனவேதான் மெய்யான தேவனுடைய பிள்ளைகள் என்பதை நிரூபிக்க.

> "மேலும் எவர்கள் தேவனுடைய ஆவியினாலே நடத்தப் படுகிறார்களோ, அவர்கள் தேவனுடைய புத்திரராயிருக் கிறார்கள் *(ரோ : 8 : 14)*

என்ற வசனம் வாக்குப் பண்ணப் பட்டுள்ளது. உண்மையான தேவபிள்ளைகள் ஆத்தும வல்லமையினாலல்ல ஆவியினால் நடத்தப் படுகிறவர்களாயிருப்பார்கள் இப்படிப்பட்ட வல்லமையே நமக்குத் தேவை. (இந்த ஆத்தும வல்லமையைப்பற்றி அதிகம் அறிய விரும் புவோர் Watchman Nee என்ற சீன தேச பரிசுத்தவான் எழுதிய **The Latent Power of the Soul** "என்ற ஆங்கில புத்தகத்தை வாங்கி வாசிக்க அன்புடன் வேண்டுகிறேன்.)

பிசாசானவன் எவனை விழுங்கலாமோவென்று கெர்ச்சிக்கிற சிங்கம் போல கூடுமானால் தெரிந்து கொள்ளப்பட்ட தேவ பிள்ளைகளையும் வஞ்சிக்கத்தக்கதாக இக்கடைசி நாட்களில் அற்புத அடையாளங்களின் மூலமாக இந்த ஆத்தும வல்லமையை பயன்படுத்திக் கொண்டிருக்கின்றான். சில சமயம் விசுவாசிகள் கூட இந்த ஆத்தும வல்லமையில் அகப்பட்டு விடுகின்றனர். இப்படிப்பட்டவர்களால் சபையும் கெட்டு விடுகின்றது. இன்று உலகில் எங்கு பார்த்தாலும் வெளிப்படையான அடையாளங்களையே நாடுகின்ற படியால் வேத வசனத்தை புறம்பாகத் தள்ளிவிட்டு. ஆத்தும வல்லமை மூலம் இன்று உலகை பிசாசு பாதாளம் நோக்கி வழி நடத்துகின்றான்.

இன்றும் அனேகர் கர்த்தர் எனக்குத் தரிசனம் தந்தார்; அதை வெளிப்படுத்தினார், இதைச் சொன்னார், என்று சொல்லி அனேகரைக் குழப்புகின்றனர். உண்மையில் நாம் பரிசுத்தாவிக்குள்ளாக எவ்வித வெளிப்படையான Emotion இல்லாமல் காத்திருக்கும் போது பெற்றுக்கொள்வதே தேவனால் அருளப்படுபவையாகும். மற்றவையாவும் ஆபத்தானவை.

# CHAPTER 6

## தவறான தீர்க்கத் தரிசனங்கள் :-

எனக்கு தெரிந்த ஒரு சகோதரியிடம் ஒருவர் சென்று "சகோதரியே உனக்கு ஆண் குழந்தை பிறக்கும் அதற்கு என் பெயரை வைக்கவும்" என்று தீர்க்கதரிசனமாக சொன்னாராம். அச்சகோதரி என்னிடம் சொன்னபோது நிச்சயம் உனக்குப் பெண் குழந்தைதான் என்று விளையாட்டாகச் சொல்லிவிட்டு வந்துவிட்டேன் (திர்க்கதரிசனமாக அல்ல) உண்மையில் பெண் குழந்தைதான். பிறந்தது. சும்மா கண்ட கண்ட காரியங்களுக் கெல்லாம் "ஆண்டவர் சொன்னார்" என்று ஆத்தும வல்லமை யைக்கொண்டு கூறுவது ஆபத்தில் முடியும்.

இன்னும் சிலர் சபைகளில் தேவ பிள்ளைகள் ஆவியில் நிரப்பி தீர்க்கதரிசனம் சொல்லும் போது நாமும் அமைதியாயிருந்தால் நம்மை குறைவாக எடை போட்டு விடுவார்கள். நாமும் கொஞ்சம் தீர்க்கத் தரிசனத்தை அவிழ்த்து விடலாம் என எண்ணி ஆத்துமத்தின் சில எண்ணங்களை சத்தமாய் சொல்லி விடுகின்றனர். இப்படிபட்டோரை பிசாசு நிச்சயம் பரிதாப மாக ஏமாற்றி விடுகின்றான்.

ஒருவர் என்னிடம் இவ்விதமாகச் சொன்னார் "அடடே நீங்கள் தீர்க்கத் தரிசனம் சொல்வதினால் தான் கூட்டம் ஏராளமாக வருகிறது போலும், இது எனக்கு முன்பே தெரிந் திருந்தால் நானும் சில தீர்க்கதரிசனங்களை அவிழ்த்து விட்டிருப் பேனே" என்றார். தீர்க்க தரிசனம் என்ன விளையாட்டுப் பொருளா ? வேதம் சொல்கிறது.

> "தீர்க்கத்தரிசனமானது ஒரு காலத்திலும் மனுஷருடைய சித்தத்தினாலே உண்டாகவில்லை; தேவனுடைய பரிசுத்த மனுஷர்கள் பரிசுத்த ஆவியினாலே ஏவப்பட்டுப் பேசி னார்கள்" (II பே : 1 : 21)

என்ற வசனப்படி தேவனுக்குரிய பரிசுத்தத்தின்படி வாழ்ந்து, பரிசுத்த ஆவியினாலே ஏவப்பட்டுக் கூறப்படுவதே தீர்க்கதரிசனமாகும்.

எல்லாரும் தீர்க்கதரிசனம் கொடுக்கிறார்கள் நானும் கொடுக்கிறேன் என்போர் கவனிக்க வேண்டியது "எல்லோரும் சந்தைக்குப் போகிறார்கள் என்று நரியும் சந்தைக்கு போனதாம், தோலை உரித்து அனுப்பினார்களாம்" என்ன இது நேற்று வந்த விசுவாசி தீர்க்கதரிசனம் சொல்லலாம் 20 வருடம் விசுவாசியாயிருக்கிற நான் சும்மாயிருப்பதா என்று கண்ணை மூடிக்கொண்டு "மகனே கர்த்தர் உன்னைச் சந்திக்கிறார்" என்றாராம் ஒருவர். என்னங்க இது? எல்லாரையும் சந்திக்கத்தானே கர்த்தர் வந்துள்ளார். இதில் ஸ்பெஷல் சந்திப்பு வேறு உண்டா? இன்னொரு சமயம் சிலர்கூடி ஜெபித்தனர். இதில் 4 சகோதரிகளும் இருந்தனர். ஒரு சகோதரர் கண்ணை மூடிக்கொண்டு "பச்சைச்சேலை கட்டிய சகோதரியே ... " என்றாராம். ஏனய்யா 4 பேரில் யார் பச்சை சேலை கட்டியதென்று கண்ணைத்திறந்து கொண்டே சொல்ல வேண்டியதுதானே! கண்ணை மூடிக்கொண்டு சொன்னவுடன் தீர்க்கத்தரிசனமாகி விடுமா! இவையெல்லாம் தவறானவைகள். பிசாசு இதைப்பயன் படுத்திக் கொண்டு "உன்னைப்போல பரிசுத்தவான், பரிசுத்தவாட்டி இல்லை; நீ கொடுப்பதுதான் சரியான தீர்க்கத் தரிசனம்" என்றெல்லாம் சொல்லுவான். உண்மையான ஒழுங்கை விரும்புகின்ற போதகர் அவர்களிடம்வந்து" சகோதரனே (or) சகோதரியே கொஞ்சம் அடங்கியிருங்கள்; எச்சரிக்கையாயிருங்கள் என்றால் உடனே "இந்தப்போதகருக்குப் பெருமை வந்து விட்டது" இனி இவருடைய சபையில் இருக்க மாட்டேன் என நாடோடிகள்; குரங்குகள்போல சபைக்குச்சபை தாவிக் கொண்டிருக்கின்றனர். இதைவாசிக்கும் அன்பான நேயரே! இப்படிப் பட்டோருக்காக ஜெபிப்பதுடன்; நம்முடைய வாழ்வில் இப்படிப் பட்ட தவறுகளில் விழாதபடி கவனமாயிருப்போம்.

தவருன தரிசனங்கள்:

இன்று அனேகர் எதற்கெடுத்தாலும் "தரிசனங்கண்டோம்" என்று அடித்து விடுகின்றனர், இதுவும் ஆபத்தானதே! சிலர் கண்ணை மூடிக்கொண்டு "கல்வாரியின் காட்சி தெரிகின்றதே" என்பார்கள். இது என்ன? கல்வாரியை சிந்தனை பண்ணிக் கொண்டு கண்களைமூடிப்பாருங்கள், கல்வாரி காட்சி தான் தெரியும். இதெல்லாம் தரிசனமல்ல.

ஒரு சமயம் ஆலயத்தில் நாங்கள் குழுவாக ஜெபிக்கும் போது ஒரு சகோதரி மட்டும் "ஆண்டவரே என் தரிசனத்தை நிறைவேற்றும்" என்று வைராக்கியமாய் ஜெபித்தார்கள். அவர்கள் எண்ணங்கள் என்ன வென்று ஏற்கெனவே நாங்கள் அறிவோம்.. அவர்களிடம் என்ன தரிசனம்?" என்று கேட்டேன். எனக்கு திருமணமாவது போல தரிசனம் என்ருர்கள் (அவர்கள் ஏற்கெனவே கணவனை இழந்தவர்கள்) (பாருங்கள் கோவிலில் இருக்கும் போது தான் கலியாணத் தரிசன மெல்லாம்) சரி! யாரைத் தரிசனத்தில் கண்டீர்கள் என்றதும் என்னருகேயிருந்த ஒரு சகோதரனைப்பார்த்து "இவர்தான்" என்ருர்கள், அவர் கையை உதறிக்கொண்டு "ஐயோ நான் இல்லை; இல்லவே இல்லை...கர்த்தர் எனக்கு தரிசனமெல்லாம் காண்பிக்கவில்லை" என்று அலறினர். அச்சகோதரியோ" இல்லையில்லை நீங்கள் தான், கர்த்தர் உங்களைத்தான் காண்பித்தார்" என்று சாதிக்க துவங்கினர்கள். முடிவு அன்பின் ஐக்கியத்தைவிட்டு பிரிந்து போனார்கள். இப்படிப்பட்ட ஏராளமான காரியங்களை நான் எழுத முடியும். இவையெல்லாம் ஆத்தும வல்லமையை பிசாசு தவருகப் பயன் படுத்த இடங்கொடுப்பதின் மூலம் உண்டாகிறவைகளே!

இன்று கிறிஸ்தவத்தைத் தவிர பிற மதங்களிலும் மிக்க பக்தியாக வாழ்ந்து, தங்கள் தியானங்கள்; சரீர ஒடுக்கம் இவை மூலமாக ஆத்தும வல்லமையை வெளிப்படுத்தி அவர்களிடம் போவோருடைய கடந்த கால; வருங்கால காரியங்களை மிக்க திட்டமாகக் கூறுவார்கள். இவையெல்லாம் ஆவியின் வல்லமை யல்ல, ஆத்தும வல்லமையின் கிரியைகளே! தேவனுடைய

ஆவியினுல் நிரப்பப்பட்டவன் கடந்த கால காரியங்களையே அறிவிப்பவனுக அல்ல நிகழ்காலத்தில் வந்திருக்கும் மனிதன் தேவனிடமாக திரும்புவதற்கு ஏதுவாக வருங்காரியங்களையும்; பக்தி விருத்திக்கேதுவானவைகளையும் அறிவிப்பான்.

இன்று சொப்பனங்களைக் கூட தரிசனம் என்று எண்ணி வேடிக்கையானவற்றை வெளியில் சொல்கின்றனர். அந்தமான் தீவில் வாழும் ஒருவர் சிங்கம் வந்து தாக்குவதுபோல தரிசனங் கண்டதாகச் சொன்னுரேயானுல் எத்தனை நூற்ருண்டுகள் காத்திருந்தாலும் அங்கே சிங்கம் வரப்போவதும் இல்லை, கடிக்கப் போவதும் இல்லை. எனவே சொப்பனங்களைப் பற்றியும் கவனமாயிருக்க வேண்டும்.

உண்மையான தரிசனம் என்பது ''நாம் ஆவிக்குள் நிரம்பியிருக்கும் போது மட்டும் முகமுகமாய் பார்ப்பது போல காணப்படும். இந்த ஆவிக்குள் நிரம்பியிருத்தல் என்பது ஆத்துமாவும், சரீரமும் பரிபூரணமாக ஆவியின் கட்டுப்பாட்டுக்குள் அடங்கியிருப்பதேயாம். இதையே பவுல் II கொரி : 12 : 1- 4 வரையுள்ள பகுதிகளில்.

> ''கிறிஸ்துவுக்குள்ளான ஒரு மனிதன் மூன்ரும் வானம் வரைக்கும் எடுக்கப்பட்டபோது சரீரத்திலிருந்தானே or சரீரத்திற்குப் புறம்பேயிருந்தானே அறியேன் தேவன் அறிவார்'' என்கிருர்.

இது பட்டுமின்றி அப் : 10 : 9-20 வரையுள்ள பகுதியும் ஒரு தரிசனமே. இதுவும் பேதுரு ஜெபம் பண்ணிக் கொண்டிருக்கும் போது மட்டுமே கண்டான். வெளிப்படுத்துதலிலும் ''கர்த்தருடைய நாளில் யோவான் ஆவிக்குள்ளானபோது தான் யாவையும் தரிசனமாகக் கண்டான்''.

கர்த்தரோடு கூட நெருங்கி ஜீவித்து; அவரால் உன்னதமான பாத்திரங்களாய் கருதப்படும் ஒரு சிலரையே தேவன் இவ்வித அனுபவங்களில் வழி நடத்துகிருர். எனவே தரிசனம் என்பது

"நம்முடைய ஆவியின் மூலமாக பரிசுத்த ஆவியானவருக்குள் நிறைந்து இருக்கும் போது தேவன் கொடுப்பவை மட்டுமே" இவையல்லாமல் சொல்லப்படும் தரிசனங்கள் யாவும் கீழ்க்கண்ட வண்ணமேயுள்ளன.

"கர்த்தருடைய வாக்கை அல்ல; தாங்கள் யூகித்த தரிசனத்தைச் சொல்லுகிறார்கள் என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார்" (எரே : 23 : 16)
மேலும் இவர்களைத் தான் அனுப்பவில்லை என்றும் கர்த்தர் சொல்லுகின்றார். கர்த்தரின் வசனப்படி அல்லாமல் நம்முடைய சுய நீதிகளை சார்ந்து கொண்டு துணிந்து நடந்தால் ஓரிரு தரிசனங்களை ஏமாறாமல் இருப்பதற்காக சரியாகக் காண்பித்து விட்டு பின் யாவையும் குழப்பத்துக்கேதுவாக மாற்றி உங்கள் ஆவியின் வல்லமையை மறைத்து ஆத்தும வல்லமையில் கிரியை செய்யும் படி பரிதாப நிலைக்கு கொண்டு செல்ல பிசாசானவன் காத்திருக்கின்றான். இப்படி அனேகரை இன்று வஞ்சித்து வைத்துள்ளான்.

ஒரு சமயம் ஒரு சகோதரியை என்னிடம் கொண்டுவந்தனர். என்னவென்று விசாரித்த போது இவர்கள் சபையில் தீர்க்கதரிசனம் எல்லாம் சொல்கிறார்கள். ஆனால் அதிகமாகக் கூச்சல் போட்டு சபையை நடத்தமுடியாதபடி கலகம் உண்டாக்கு கிறார்கள் என்றனர். பரிசுத்த ஆவியானவர் கிரியை செய்வாரே யானால் "சகலமும் கிரமமாயும் ;நல்லொழுக்கமாயும் நடக்க வேண்டுமல்லவா ? ஆண்டவரே இது என்ன என்ற போது தேவ னுனவர் சில காரியங்களைச் சொன்ன போது ஜெபிக்க ஆரம்பித் தோம். பரிசுத்தாவியால் நிரப்பப்பட்டது போலவே அவர்களும் சில கிரியைகளைச் செய்தார்கள். அருகிலிருந்த தம்பி ஒருவர் "அண்ணா பாருங்கள் பரிசுத்தாவிக்குள்தானே நிரம்புகிறார்கள்" என்று கேட்டார். கொஞ்சம் பொறுங்கள் என்று சொல்லி விட்டு எல்லோரும் ஸ்தோத்திரம் பண்ணிக்கொண்டேயிருந்தோம். சில நிமிடங்களுக்குள் "சாப்பிட்டேன், சாப்பிட்டேன்" என்று கத்தவும் "அதினாலே வந்தேன்" என்று ஓலமிடவும் தொடங்கியது.

இப்போது இயேசுவின் நாமத்தில் சொல்கிறேம் ஓடிப்போ என்றதும் ஓடிப்போனது. இச்சகோதரியும் ஆவிக்குரியவர்களாயில்லாதபோது பிறரைப் போல தீர்க்கதரிசனம், தரிசனம் என்று தாகை இறங்கியபோது வஞ்சிக்கிறவனுகிய பிசாசானவன் இவர்களை ஆத்தும வல்லமையின் மூலம் கிரியைச் செய்ய வைத்து எல்லேரையும் ஏமாற்றி; தேவனுடைய சபைக்குள்ளும் குழப்பங்களை உண்டு பண்ணிக்கொண்டிருந்தான் என்பது கடைசியில் வெளிவந்து விட்டது.

இக்கடைசி நாட்களில் வல்லமைகள் பெறவேண்டும் என்று அங்கு மிங்கும் ஓடும் சிலர் ஆவிக்குரிய வாழ்வுடையவர்களாயிராவிடில் வஞ்சிக்கிற பிசாசின் ஆவியினல் ஏமாற்றப்படுவது உறுதி என்பதை திட்டமாய் உணரக் கடவர்கள்.

## டெலபதி (TELEPOTHY) :-

இது Mesmerizm or Hypnotizm இவைகளிலிருந்து வந்தது தான். இதன் மூலம் இவ்வல்லமையை பயன் படுத்துவோரிடம் சென்றல் நம் மனதிலுள்ள யாவையும் அப்படியே அறிந்து கொள்வார்கள். இதையே Mind Reading என்கின்றனர். இதை பிசாசானவனே தன் வல்லமையின் மூலம் ஆத்தும வல்லமையைக் கொண்டு கிரியை நடப்பிச்கும் பயங்கரமான கலையாகும் நம்முடைய சகல எண்ணங்களையும் சொல்லும் போது மெய்மறந்து கேட்கவும் செய்கிறேம். இதனல் என்ன பலன்? பிறருடைய எண்ணங்களை ஏன் அறிய வேண்டும்?

"கிறிஸ்து இயேசுவிலிருந்த சிந்தையே உங்களிலும் இருக்கக் கடவது" (பிலிப் 2 ; 5)

என்பதே முக்கிய காரியம் என்பதே சத்தியம், அடுத்தவனுடைய சிந்தை நமக்கு எதற்கு? ஒரு சபையில் ஒருவனுடைய சிந்தனையை மற்றவர் அறியத் துவங்கினல் அது யுத்தக்களமாகி விடுமல்லவா?

ஆண்டவர் எதைச்செய்தாலும் ஒழுங்கும் கிரமமாகவும் தேவ பக்திக்கேதுவாகவுமே செய்கிறர். அதையும் ஆத்தும

வல்லமையினுல் அல்ல ஆவியின் வல்லமையினுல் தான். அப்போஸ்தலர் 5 ஆம் அதிகாரத்தின் சம்பவத்தை ஆராய்ந்தால் "விசுவாசிகள் யாவரும் தங்கள் ஆஸ்தியை விற்று பணத்தை அப்போஸ்தலருடைய பாதபடியிலே வைத்தபோது ஒருமனப்பாட்டுக்கு எடுத்துக்காட்டாகிய" அனனியா - சப்பீராள் தம்பதிகளும் ஆஸ்தியை விற்றனர். அதன் பின்பு ஒரு பங்கை சிறு சேமிப்பு பணமாக வைத்துக்கொண்டு (எதற்கும் பாதுகாப்பிற்காக அப்போஸ்தலர் கூட்டம் ஒருவேளை திவாலாகிவிட்டால் உதவியாயிருக்குமல்லவா) முதலில் ஐயா உள்ளே வருகிறுர். தேவ ஆவியினுல் நிரம்பிய பேதுரு "அறிந்து கொள்கிற வரத்தில் (The Word of Knowledge) ஆவியானவரால் உபயோகப்படுத்தப் படுகின்றுர். "நிலத்தை இவ்வளவுக்குத்தாணு விற்றீர்கள்" என்றதும் ஆம் என்று பொய் சொன்னதும் மரித்துப்போனுன், மனைவியாகிய சப்பீராளுக்கும் அதே முடிவு. இது எப்படி நடந்தது. சபையானது களங்கப்பட்டு விடக்கூடாது என்று தேவ ஆவியானவரின் வல்லமையால் காரியம் வெளியாயிற்று மற்றபடி Telepothy வல்லமையினுல் அல்ல. ஆவியின் வல்லமையே பெரிது. எந்த ஒரு காரியத்தையும் ஆண்டவர் ஏவுகிறுர் என்று செய்துவிட்டு முடிவில் அக்காரியம் தோல்வியடையும் போது நம்மூலம் ஆண்டவரின் மேலான நாமம் கனவீனப்படுகிறது அல்லவா? ஒரு வீட்டுக்கு கர்த்தர் போக ஏவுகிறுர் என்று சொல்லி போய்விட்டு அந்த வீடு பூட்டிக்கிடந்தால் வெட்கத்துடன் திரும்ப வேண்டியதாயிருக்குமல்லவா? எனவே.

"ஆவிக்குரியவன் எல்லாவற்றையும் ஆராய்ந்து நிதானிக்கிறுன்"
(1 கொ:2 :15)

என்ற வசனப்படி ஜீவிப்பதே ஆசீர்வாதமாகும்.

**நடைமுறை ஜீவியம் சரியில்லை-கிரியைகளோ ஆவிக்குரியவை இது எப்படி ?**

ஒரு முறை ஒரு தம்பி என்னிடம் அண்ணு! அந்த சகோதரன் தீர்க்கதரிசனம் சொல்கிருர் அது சரியாக உள்ளது; அந்நிய பாஷையில் அழகாகப் பேசுகிருர் எல்லமே ஆவிக்குரிய வையாக உள்ளது. ஆனுல் மறுபுறம் அவர் வாழ்க்கையில் யாவும் நேர் மாருக ஜீவிக்கிருரே! இது எப்படி என்றுர். அருமையான வர்களே! ஆம்! இன்றைய ஆவிக்குரிய உலகின் பெரிய பிரச்சனை இது தான். கூட்டங்களில் வரும் போது அந்நிய பாஷை உண்டு; தீர்க்கதரிசனம், வெளிப்பாடு, வரங்கள், தரிசனங்கள் யாவும் உண்டு, வெளியே செல்லும் போது உலகின் அசுத்தங்கள் யாவும் உண்டு, இரகசியப் பாவங்கள் உண்டு, இதனுல் காரியம் புரியாமல் இடறிப் போவோர் ஏராளம். வேதம் சொல்கிறது :

> ''என் சகோதரரே இப்படியிருக்கலாகாது; ஒரே ஊற்றுக்கண்ணிலிருந்து தித்திப்பும், கசப்புமான தண்ணீர் சுரக்குமா? என் சகோதரரே, அத்தி மரம் ஒலிவப் பழங் களையும், திராட்சச் செடி அத்திப் பழங்களையும் கொடுக் குமா ? அப்படியே உவர்ப்பான நீரூற்றுத் தித்திப்பான ஜலத்தைக் கொடுக்க மாட்டாது'' (யாக்கோபு : 3 :11-12)

> ''நல்ல மரமானது கெட்டகனி கொடாது; கெட்ட மரமா னது நல்ல கனி கொடாது; அந்தந்த மரம் அதனதன் கனியினுல் அறியப்படும்'' ......... (லூக் 1 6:43 44)

மேற்கண்ட வசனங்களின்படி நல்ல மரம் நல்ல கனியையே தரவேண் டும். அப்படியானுல் இன்றும் அடிக்கடி கடிந்து கொள்ளப்பட்டும் பிடரியை கடினப்படுத்துவோர் தாங்கள் பெற்ற பரிசுத்த ஆவி யானவரைத் துக்கப்படுத்தி, வேதனைப்படுத்திக் கொண்டேயிருக் கிறபடியால் முற்றும் முடியாத பட்சத்தில் கர்த்தருடைய ஆவியா னவர் விலகி விடுகிருர். இதுதான் சமயமென்று எவனை

விழுங்கலாமென்று காத்திருந்த பிசாசு உள்ளே புகுந்துகொண்டு ஆத்தும வல்லமையை தூண்டி விட்டு 'போலியான ஆவிக்குரிய காரியங்களை'' நடப்பிக்கச் செய்கிறான். ஆனால் வாழ்க்கையோ பரிதாபமான நிலை. அன்பானவர்களே! இப்படிப் பட்டோரை களையெடுப்பது கடினமாகும். எனவே கவனமாயிருப்போம். ஆட்டுத்தோலாகிய ஆவிக்குரிய போர்வைகளைப் போர்த்துக் கொண்டு ஆத்தும வல்லமையினால் கிரியை செய்யும் ஓநாய்கள் மந்தையைத் தப்ப விடாதபடி தொடர்ந்து வருமென்று ஆவியானவர் பவுலைக் கொண்டு எவ்வளவு அழகாய் எழுதி வைத்துள்ளார். இப்படிப் பட்டோரை அடையாளம் கண்டு கொள்ளும் பிரகாசமுள்ள மனக் கண்களையும், ஆவிகளை பகுத்தறியும் வரத்தையும் தேவன் நம்மெல்லாருக்கும் தரும்படி ஆண்டவரிடம் கேட்போம்.

"அவர்களுடைய கனிகளினாலே அவர்களை அறிவீர்கள்"

(மத் 7 : 20)

## CHAPTER 7

### வெற்றிகரமான ஆவிக்குரிய வாழ்வின் சில இரகசியங்கள் :

இதுவரையுள்ள பகுதிகளை படித்த பின்பு நம் வாழ்வில் உண்மையான ஆண்டவருக்குப் பிரியமான; வெற்றியுள்ள ஆவிக்குள்ளான வாழ்க்கை வாழ வேண்டும் என்ற எண்ணம் மேலோங்கியுள்ளதல்லவா? அதற்கென சில எளிதான வழிகளை நாம் வேத வசன அடிப்படையில் படிக்கலாம்

### I வேத வசனங்களை தியானிக்க வேண்டும் :

நம் சரீரம் நன்கு வாட்ட சாட்டமாக வளர வேண்டுமானால் எப்படி அருமையான உணவுகள் தேவையோ அவ்வண்ணமே நமது ஆவியும் (உள்ளான மனுஷன்) வளர வேண்டுமானால் நல்ல அருமையான ஒரே உணவு வேத வசனம் மட்டுமே.

"நீங்கள் வளரும்படி புதிதாய் பிறந்த குழந்தைகளைப் போல; திரு வசனமாகிய களங்கமில்லாத ஞானப் பாலின் மேல் வாஞ்சையாயிருங்கள் (I பே :2:3)

"கர்த்தருடைய வேதத்தில் பிரியமாயிருந்து, இரவும் பகலும் அவருடைய வேதத்தில் தியானமாயிருக்கிற மனுஷன் பாக்கியவான் (சங் : 1 : 2)

ஆவிக்குரிய வாழ்வில் பெலப்பட்டு, கர்த்தருக்காக பெரிய காரியங்களைச் செய்ய விருப்புகிற எவரும் கர்த்தருடைய வேதத்தைப் படிப்பது மட்டுமல்ல தியானமாயிருக்கவும் வேண்டும். நம்முடைய வாஞ்சையெல்லாம் வேதத்தின் மேலேயே இருக்க வேண்டும். சிலருடைய பைபிளை வாங்கிப் பார்த்தால் கோடுகளாகப்போட்டுத் தள்ளியிருப்பார்கள். இது அவர்களின் வாஞ்சையையே வெளிப்படுத்தும்.

இராஜாவாகிய தாவீது தேவனுடைய வேதத்தை எவ்வளவாய் நேசித்தார் என்பதை சங்கீதம் 119ல் மிக அழகாக: தெளிவாக எழுதியுள்ளதைக் காணலாம் எனவே தேவனுடைய இருதயத்துக்கு ஏற்றவராக காணப்பட்டார்.

> ‘‘மனுஷன் அப்பத்தினாலே மாத்திரமல்ல தேவனுடைய வாயிலிருந்து புறப்படும் ஒவ்வொரு வார்த்தையினாலும் பிழைப்பான்’’ என்றார். (மத் : 4 : 4)

இன்னும் ஆவிக்குரிய வாழ்வில் பிழைத்திருக்கிற வேண்டுமானால் தேவனுடைய வார்த்தை நமக்குள் அனுதினமும் செல்ல வேண்டும்,

> ‘‘இந்த நியாயப் பிரமாண புஸ்தகம் உன்வாயை விட்டுப் பிரியாதிருப்பதாக. இதில் எழுதியிருக்கிறவைகளின் படியெல்லாம் நீ செய்யக் கவனமாயிருக்கும்படி இரவும் பகலும் அதைத் தியானித்துக் கொண்டிருப்பாயாக. அப்போழுது நீ உன் வழியை வாய்க்கப் பண்ணுவாய். அப்பொழுது புத்திமானாயும் நடந்து கொள்ளுவாய்’’ (யோசு : 1 : 8)

எப்போதும் நாம் ஒருவரோடொருவர் பேசும் போதெல்லாம் (Conversations) அவை வேத வசனங்களாலேயே நிரம்பியிருக்க வேண்டும்.

நான் அமெரிக்க தேசத்தில் வேதாகமக் கல்லூரியில் படிக்கும் போது ஒரு நாள் இருமிக் கொண்டிருந்தேன். உடன் மாணவர் ஒருவர் ‘இருமாதே’ என்றார். பின் என்னசெய்வது என்றேன். ஆண்டவராகிய இயேசு ‘‘உன்னுடைய பாடுகளை ஏற்றுக் கொண்டு, உன்னுடைய துக்கங்களைச் சுமந்தார் (ஏசா : 53 : 4) அவருடைய தழும்புகளால் குணமானாய்’’ (1 பே : 2 : 24) இவ்வசனங்களை அறிக்கையிடு என்று சொன்னபோது எந்த சூழ்நிலையிலும் வேதவசனங்களை அறிக்கையிடுவது எவ்வளவு இன்றியமையாதது என்பதை உணர்ந்து கொண்டேன்.

ஆதிகாலங்களில் தேவ பிள்ளைகள் ஒருவரையொருவர் சந்திக்கும்போது மாரநாதா (கர்த்தர் வருகிறார்) என்றும் ஷாலோம் (சமாதானம்) என்றும் சொல்லி வாழ்த்துக்களைத் தெரிவிப்பார்கள். இன்றும் இரட்சிக்கப்பட்ட தேவபிள்ளைகள் (Praise the Lord) கர்த்தருக்கு ஸ்தோத்திரம் சொல்லுவதும் இப்படிப்பட்டதே. எப்படியாயினும் ஆண்டவருக்குரிய வார்த்தைகள் நம் வாயை விட்டுப் பிரியவே கூடாது.

"ஆசாரியனுடைய உதடுகள் அறிவைக் காக்க வேண்டும்; வேதத்தை அவன் வாயிலே தேடுவார்களே" (மல்:2:7) ஏனென்றால்,

"ஆவியே உயிர்ப்பிக்கிறது; மாம்சமானது ஒன்றுக்கும் உதவாது. நான் உங்களுக்குச் சொல்லுகிற வசனங்கள் ஆவியாயும் ஜீவனாயும் இருக்கிறது' (யோ:6:63)

"வானமும் பூமியும் ஒழிந்துபோம்; என் வார்த்தைகளோ ஒழிந்து போவதில்லை (மத் : 24: 35)

"உமது சகல பிரஸ்தாபத்தைப் பார்க்கிலும் உமது வார்த்தையை நீர் மகிமைப் படுத்தியிருக்கிறீர் (சங் : 138 : 2)

இப்படிப் பட்ட ஏராளமான வசனங்கள் மூலம் நாம் எப்போதும் தியானிக்க வேண்டிய வேத வசனங்களின் மகத்துவத்தை உணரலாம். தேவனுடைய வார்த்தையை நாம் எடுத்து உபயோகிக்கும் போது தேவன் அதைக் கண்டிப்பாக மகிமைப்படுத்துவார்.

**தீர்க்கதரிசன வரத்தில் பயன்பட விரும்புவோர் கார்த்தருடைய வசனங்களால் நிரம்பியிருக்க வேண்டும் :**

"சத்திய ஆவியாகிய அவர் வரும்போது சகல சத்தியத்திற்குள்ளும் உங்களை நடத்துவார்; அவர் தம்முடைய சுயமாய்ப் பேசாமல் தாம் கேள்விப் பட்டவைகள் யாவையும் சொல்லி வரப் போகிற காரியங்களை உங்களுக்கு அறிவிப்பார்.

"அவர் என்னுடையதில் எடுத்து உங்களுக்கு அறிவிப்பதினால் என்னை மகிமைப்படுத்துவார்" (யோ : 16 : 13-14)

அன்பானவர்களே! அப்போஸ்தலனாகிய பவுலைப் போல "நீங்கள் தீர்க்கதரிசனம் சொல்லுகிறவர்களாக வேண்டுமென்று அதிகமாய் விரும்புகிறேன்" (I கொ : 14 : 5) ஆனால் மேற்கண்ட வசனத்தின் படி பார்க்கும் போது நாம் வேதவசனங்களை நம்முடைய இருதயங்களில் தியானித்து நிரப்பியிருக்க வேண்டும். அப்போது ஒருவன் பரிசுத்தாவியானவரால் நிரப்பப்படும் பொழுது சத்திய ஆவியாகிய அவர் "வரப்போகிற காரியங்களை அறிவிக்கும்படி" நமக்குள் நிரம்பியுள்ள வேத வசனங்களை தம்முடைய வார்த்தைசயுடன் சேர்த்து நம் மூலம் வெளிப்படப் பண்ணுகிறார். இதையே

ஆண்டவர் "என்னுடையதில் எடுத்து உங்களுக்கு அறிவிப்பார்" என்றார். முற்றிலும் ஆவியில் நிரம்பியிருக்கும் போது வேத வசனங்களைச் சார்ந்து ஆண்டவர் ஏவுகிற காரியங்களை தைரியமாய் சபையில் அறிவிப்பதே தீர்க்க தரிசனமாகும். வேதவசனத்தைச் சார்ந்திராத எந்தத்தீர்க்க தரிசனமும் ஆவியானவரால் கொடுக்கப்பட்டதல்ல. எனவே தீர்க்கதரிசனம் சொல்ல விரும்பும் யாவரும் :-

(a) அபிஷேகம் பெற்றிருக்க வேண்டும்
(b) வேத வசனங்களால் நிரம்பியிருக்க வேண்டும்
(c) தீர்க்க தரிசனம் சொல்லும்போது ஆவியானவரால் நிரம்பியிருக்க வேண்டும்
(d) ஆவியானவர் தரும் வார்த்தைகளைத்தைரியமாய் பேசவேண்டும்

வாசிக்கும் நேயரே! நீங்களும் மேற்கண்ட அனுபவங்களுக்குக் கீழ்ப்படிந்து ஆவியின் வரமாகிய தீர்க்க தரிசன வரத்தில் உபயோகப்படுத்தப்பட்டு சபைக்கும் ஆண்டவருக்கும், ஏன் உபயோகமாயிருக்கக் கூடாது? சபையில் தீர்க்கத் தரிசனம் சொல்வதினால்; I கொ - 14 : 3 : 4ன் படி

(a) மனுஷருக்குப் பக்தி விருத்தி உண்டாகிறது
(b) புத்தி உண்டாகிறது
(c) ஆறுதல் உண்டாகிறது
(d) சபைக்குப் பக்தி விருத்தி உண்டாகிறது

இப்படிப்பட்ட மேன்மையான பணியைத் தேவனிடம் மன்றாடிக் கேட்போம்.

*****

## CHAPTER 8

### II வேத வசனத்தை அனுதின அனுபவத்தில் கொண்டு வரவண்டும் :-

### (We must practise the word of God in our daily life)

ஆவிக்குரிய வாழ்வில் வெற்றியடைய முதல் படியாக வேத வசனத்தைத் தியானிக்க வேண்டும் எனப்படித்தோம். இரண்டாவது படியாக வேத வசனத்தை அனுபவத்தில் கொண்டு வர வேண்டும். அதாவது தியானிக்கிற வசனங்களை நடைமுறை ஜீவியத்தில் நடத்திக் காண்பிக்க வேண்டும். இயேசுவானவர் எப்படி பரிசுத்தமான ஜீவியத்தை நடத்திக் காண்பித்தாரோ அவ்வண்ணமே அவருடைய அடியாராகிய நாமும்

> "அவருக்குள் நிலைத்திருக்கிறேனென்று சொல்லுகிறவன் அவர் நடந்த படியே தானும் நடக்க வேண்டும்" (I யோ : 2 : 6)

என்ற வசனப்படி நடந்து காண்பிக்க வேண்டும்.

உலகப் பிரகாரமான திறமைகளையும், ஞானங்களையும், ஆத்தும வல்லமையையும் உடையோர் அவற்றை வெளிப்படுத்தி சாதனைகளை நடத்திக் காண்பிக்க முடியும் எனில் " ஆவியின் வல்லமையைப் " பெற்ற நாம் ஏன் நமக்குள் நிரம்பியுள்ள வேத வசனங்களை நடத்திக் காண்பிக்க முடியாது ? " செய்ய முடியாத ஒரு வாழ்க்கைக்கு ஆண்டவர் நம்மை அழைக்கவேயில்லை " என்பதை மறக்கக் கூடாது. என்னைப் பெலப்படுத்துகிற கிறிஸ்துவினாலே எல்லாவற்றையும் செய்ய எனக்குப் பெலனுண்டு என்று எப்போதும் "முடியும்" என்று அறிக்கையிடுவோமானால் நம்மால் நிச்சயம் முடியும்தான். உதாரணமாக ஒன்றை எழுதுகிறேன் "ஒரு சமயம் திருச்சியிலுள்ள மலைக்கோட்டையருகே ஒருவர் நின்று கொண்டு" நாளை மத்தியானம் 12 மணிக்கு நம்மள் கூப்பிடறுன் மலைக்கோட்டை நம்பள்கிட்டே வர்றுன் " என்று கூறினாராம்.

இதைக் காணப் பெருங்கூட்டம் ஒன்றுகூடியதாம். மறுநாள் அதே இடத்தில் வந்து நின்று ''மலைக்கோட்டை இங்கேவர்ருன்... இங்கே வர்ருன்'' என்று சத்தமிட்டுப் பார்த்து விட்டுகடைசியில் சொன்னுராம் ''மலைக் கோட்டை நம்பன்கிட்டே வர்ருன் இல்லே நம்பள் மலைக் கோட்டை கிட்டே போருன்'' என்று சொல்லி மலைக் கோட்டையில் ஏறிஞராம். வேடிக்கைதான்! ஆனுல் கிறிஸ்தவ ஜீவியம் இப்படி மழுப்பிப் போகிற ஜீவியம் இல்லவே இல்லை. கிறிஸ்தவ ஜீவியம் என்பது வாசிக்கிற, தியானிக்கிற; பேசுகிற வசனங்களை நடத்திக் காண்பிக்கிற உன்னதமான ஜீவியமாகும்.

> ''அல்லாமலும் நீங்கள் உங்களை வஞ்சியாதபடிக்குத் திரு வசனத்தைக் கேட்கிறவர்களால் மாத்திரமல்ல; அதின்படி செய்கிறவர்களாயும் இருங்கள். என்னத்திஞலெனில் ஒருவன் திருவசனத்தைக் கேட்டும் அதின்படி செய்யாதவனுஞல் கண்ணுடியிலே தன் சுபாவ முகத்தைப் பார்க்கிற மனு ஷனுக்கு ஒப்பாயிருப்பான்; அவன் தன்னைத் தானே பார்த்து அவ்விடம் விட்டுப் போனவுடனே தன் சாயல் இன்னதென் பதை மறந்து விடுவான்'' (யாக் 1 : 22-24)

இவ்வசனப்படி இனிமையான பிரசங்கங்களை கேட்பது இனிமை தான். ஆனுல் அதை வாழ்க்கையில் செய்து காட்டுவது அதிக இனிமையல்லவா? இவ்வசனம் எவ்வளவோ பெரிய கிறிஸ்தவ இரகசியத்தை தனக்குள்ளே அடக்கி வைத்துள்ளதல்லவா? நாம் யாவருமே கண்ணுடியில் முகத்தைப் பார்க்கின்ருேம். ஆனுல் விரைவில் அச்சாயலை மறந்து விடுவோம். யோசுவா: 1 : 8 ல் சொன்னபடி '' இந்த நியாயப் பிரமாண புஸ்தகத்தில் எழுதி யிருக்கிறவைகளின் படியெல்லாம் செய்யக் கவனமாயிரு'' என்பதே ஆண்டவரின் கட்டளை (You should be very careful to do all the things that has been written in the word of God) சொல்லப்பட்டுள்ள வேதவாக்கியங்கள் யாவற்றின் படியேயும் நடக்க கவனமாயும்; ஜாக்கிரதையாயும் இருக்கிறவனுக்கே யோசுவாவுக்கு அருளப்பட்ட ஆசீர்வாதங்களும் கிடைக்கும். மத் 16 : 25 -34 வரையுள்ள வசனங்களில் ஆண்டவர் அழகான ஆசீர்வாதங்களை அருளியுள்ளார் அவையாவன.

(a) என்னத்தை உண்போம் என கவலை வேண்டாம்
(b) என்னத்தை குடிப்போம் என கவலை வேண்டாம்
(c) என்னத்தை உடுப்போம் என கவலை வேண்டாம்
(d) நாளைய தினத்துக்காக கவலைப்பட வேண்டாம்

கவலைப்படுவதினால் ஒருவனுடைய வாழ்நாள் குறைவதாகவும் சந்தோஸமாக இருப்பதால் வாழ்நாள் நீடிப்பதாகவும் ஆராய்ச்சியாளர் அறிவித்தாலும் கவலைப்படாமலிருக்கும் வழியை உண்டு பண்ண முடிவதில்லை. ஆனால் ஆண்டவர் தேவையை அருளி சந்தோஸப்படுத்த வல்லவர் வாழ்க்கையில் வேத வசனங்களுக்கு முதலிடம் கொடுத்து வசனப்படி ஜீவிக்க முன் வருவோரின் வாழ்விலெல்லாம் மேற்கூறிய அருமையான ஆசீர்வாதங்கள் நிறைவேறுவதாக ! மட்டுமின்றி ..

"நீங்கள் ஒன்றுக்குங் கவலைப் படாமல் எல்லாவற்றையுங் குறித்து உங்கள் விண்ணப்பங்களை ஸ்தோத்திரத்தோடே கூடிய ஜெபத்தினாலும் வேண்டுதலினாலும் தேவனுக்குத் தெரியப்படுத்துங்கள் (பிலி : 4 : 6)
"அவர் உங்களை விசாரிக்கிறவரானபடியால் உங்கள் கவலைகளை யெல்லாம் அவர் மேல் வைத்து விடுங்கள்
(I பே : 5 : 7)

மேற்கண்ட வேத வசனங்களையும் நான் வாசிப்பதோடும் தியானிப்பதோடும் நின்று விடாமல் அனுபவத்தில் கவலைகள் நம்மை அழுத்தும் போது வசனப்படி கவலைகளை அவர்மேல் வைத்து விட்டு ஆவிக்குரிய வாழ்வில் விடுதலையுடன் ஜீவிக்க வேண்டும்.

"நீங்கள் என்னிலும் என் வார்த்தைகள் உங்களிலும் நிலைத்திருந்தால் நீங்கள் கேட்டுக் கொள்வதெதுவோ அது உங்களுக்குச் செய்யப்படும்" (யோ : 15 : 7)

மேற்கண்ட வசனப்படி ஆண்டவருடைய வார்த்தைகள் நிலைத்திருந்து கிரியை செய்யுமானால் நம்முடைய ஜெபங்கள் யாவும் நிச்சயம் கேட்கப்படும். வசனப்படி ஜீவியமில்லாவிட்டால் எத்தனை ஜெபம் பண்ணினாலும் பிரயோஜனமில்லை என்ற உண்மையை இதன் மூலம் அறியலாமல்லவா ?

"அதற்கு அவர் அப்படியானாலும் தேவனுடைய வார்த்தையைக்கேட்டு அதைக் காத்துக் கொள்ளுகிறவர்களே அதிக பாக்கிய வான்கள் என்றார்." (லூக்கா : 11 : 28)

★★★★
★★

## CHAPTER 9

### III வேத வசனத்துக்கு வாழ்க்கையில் முதலிடம் கொடுக்கவேண்டும் :—

ஆவிக்குரிய வாழ்வின் வெற்றிக்கு மூன்ருவது படியாக நம்முடைய வாழ்க்கையின் எக்காரியத்திலும் முதலிடம் பெற வேண்டியது வேத வசனமாயிருக்க வேண்டும். உதாரணமாக மத்தேயு : 4 ஆம் அதிகாரத்தில் பிசாசானவன் இயேசு வானவரை மும்முறை சோதித்தபோதும் அவர் தன் ஞானத்தை (intellectual) பயன்படுத்தி அவனை மடங்கடியாமல் மூன்று முறையும் வேத வசனத்தைச் சொல்லியே அவனை வெட்கத்தால் மூடினூர் ! அல்லேலூயா ! நம் வாழ்விலும் எதிரிட்டு வரும் எல்லா சோதனைகளிலும் வேத வசனங்கட்டு முதலிடம் கொடுப் போமானுல் ஜெயிப்போம்.

> ''ஆவியே உயிர்ப்பிக்கிறது ; மாம்சமானது ஒன்றுக்கும் உதவாது ; நான் உங்களுக்குச் சொல்லுகிற வசனங்கள் ஆவியாயும் ஜீவனுயும் இருக்கிறது'' (யோ : 6 : 63)

மாம்சத்திலே, சுய ஞானத்திலே ; ஆத்தும வல்லமையிலே செய்யும் யாவுமே பிரயோஜன மற்றவை ஆனுல் ஆவியாம் ஜீவ வசனங்கள் நம்மை சோதனைகளினின்று மீட்டெடுத்து உயிர்ப் பிக்கின்றன.

> கர்த்தருடைய வசனமோ என்றென்றைக்கும் நிலைத்திருக்கும் (I பே : 1 : 25)

> என் வார்த்தையைத் தீவிரமாய் நிறைவேற்றுவேன் (எரே : 1 : 12)

> வானமும் பூமியும் ஒழிந்துபோம் என் வார்த்தைகளோ ஒழிந்து போவதில்லை (மத் : 24 : 35)

என்றவசனங்களின்படி ஆண்டவருடைய வசனத்தின் மேன்மை யையறிய முடியும். இப்படிப்பட்ட வசனங்களை வாழ்வில் முதலிட மாக்கிக்கொள்வது எவ்வளவு மேன்மையானது.

உன் கண் ஒன்றை இச்சிக்கத் துவங்கும் போது உடனே கண்களின் பார்வையைப் பற்றிய வேத வசனங்களை அறிக்கையிட்டு கண்களின் இச்சையை ஜெயிக்க முடியும். அல்லது திருமணமோ; வீடு கட்டுதலோ, பிரயாணமோ எதுவானாலும் ஜோசியம்; மந்திரம் என்று ஓடாமல் வேதவசனத்தை முன் வைத்துச் செய்வோமேயானால் நிச்சயம் வெற்றியும் ஆசீர்வாதமும் பெறுவோம். எதைச்செய்தாலும் இதை என் ஆண்டவர் சொன்ன வேத வாக்கியங்கள் அனுமதிக்கிறதா? என அறிந்து கொண்டு வசனத்தை கனப்படுத்தி வாழ்வோரைத் தேவன் நிச்சயமாய் கனப்படுத்துவார்.

கர்த்தருடைய வார்த்தைக்கு முதலிடம் கொடுக்கும் போது தேவன் தாம் எரே : 1 : 12ல் சொல்லியபடி தம்முடைய வார்த்தையைத்தீவிரமாய் நிறைவேற்றுவார்.. தமக்குக் காத்திருக்கிற; தம்மை நம்புகிற; தன்னுடைய வசனங்களை முதலிடம் கொடுத்து தம்மை நோக்கிப் பார்க்கும் தன்னுடைய பிள்ளைகளை தேவன் நிச்சய்மாய் வெட்கப்படுத்தவே மாட்டார்.

ஒரு சமயம் ஒரு புகழ்பெற்ற பிரசங்கியார் தான் மாலையில் பிரசங்கிக்கப் போகும் ஆடிட்டோரியத்தைப் பார்வையிடச் சென்றார். எல்லாம் ஒழுங்கு செய்யப்பட்டு காலியாயிருந்தது. தான் பிரசங்கிக்கப் போகும் மேடையில் ஏறி நின்று கொண்டு எதையாவது பேசிப்பார்க்கலாமே என எண்ணியவராய் வாயைத் திறந்து சத்தமாய் யோவான் : 3 : 16 ஐச் சொன்னாராம். பின் இறங்கிப்போய் விட்டார். தொடர்ந்துள்ள அவருடைய கூட்டங்கள் எழுப்புதலாயிருந்தன. பிரசங்கியார் பல வருடங்களுக்குப் பின்பு அவ்வூருக்குச் சென்ற போது ஒரு மனிதர் அவரிடம் ஐயா உங்கள் மூலம் தான் நான் இரட்சிக்கப்பட்டேன் ''என்ற போது அப்படியா ரொம்ப சந்தோஸம் எந்தக் கூட்டத்தில் இரட்சிக்கப் பட்டீர்கள் என்றாராம்.

உடனே அம்மனிதர் சொன்னாராம்" ஐயா சில வருடங்கட்கு முன் இங்குள்ள ஆடிட்டோரியத்தின் கூரையில் ஏற்பட்டிருந்த ஒட்டையை அடைத்துக் கொண்டிருந்தேன். அப்போது "தேவன் தம்முடைய ஒரேபேருன குமாரனை .. இவ்வளவாய்... அன்புகூர்ந்தார் என்று பெரிய சத்தமாய் கேட்டதும் திடுக்கிட்டு ஒட்டை வழியாய் உற்றுப் பார்த்தேன். நீங்கள் தான் நின்றீர்கள்" பின் வீடு சென்ற பின்பு "இவ்வளவாய் அன்பு கூர்ந்தார்" என்ற வார்த்தை என்னோடு தொடர்ந்து பேசிய படியால் என்னை ஆண்டவருக்கு ஒப்புக்கொடுத்து அவருக்காக ஜீவிக்கிறேன் என்றாராம். ஆம் அருமையானவர்களே வேதவசனத்திற்கு முதலிடம் கொடுக்கும்போது வார்த்தையை தேவன் தீவிரமாய் நிறைவேற்றுகிறார்.

## CHAPTER 10

### IV ஆவியின் சத்தத்துக்குக் கீழ்ப்படிய வேண்டும் : (obey the Voice of your Spirit)

ஆவிக்குரிய வாழ்வின் வெற்றிக்குரிய 4வது முக்கியமான படியாக நம்முடைய ஆவியின் சத்தத்துக்குக் கீழ்ப்படிய வேண்டும் ஆத்துமா தன்னுடைய சத்தத்தை அனுதினமும் பல வித உணர்ச்சிகள் மூலம் வெளிப்படுத்துகின்றது. அவ்வண்ணமே ஆவிக்கும் ஒரு சத்தம் உண்டு. அதையே "மனசாட்சி" என்றழைக்கின்றோம். இச்சத்தத்தை காதிலே கேட்க முடியாது ஆவியிலேதான் உணர முடியும்.

நாம் ஒரு தவறைச் செய்யும் போது "ஏதோ ஒரு உணர்வு செய்யாதே" என நம்மோடு பேசுகிறது. அதுமட்டுமின்றி நல்ல காரியங்களைச் செய்யவும் நம்மைத் தூண்டி விடுகிறதல்லவா? இதுவே மனசாட்சி அல்லது ஆவியின் சப்தமாகும்.

ஒருவன் ஆவியானவராலே நிரப்பப்பட்டிருக்கும் போது ஆவியானவர் நம்முடைய ஆவியோடு பேசுகிறார், அதை உணர முடியும். அதை தைரியமாகச் சொல்லும்போது அதுவே தீர்க்கத்தரிசனமாகும் எனவே தீர்க்கத்தரிசனம் என்பது காதுகளில் ஒலிக்கும் ஏதோ சத்தத்தைக் கேட்டு அறிவிக்க வேண்டுமெனக் காத்திருந்தால் ஏமாந்து போவோம், ஆவியின் சத்தத்தை அறியும் அனுபவம் வேண்டும். ஆவியானவர் சகல சத்தியத்துக்குள்ளும் நம்மை வழி நடத்தும் ஆசிரியராக இருக்கின்றார், எனவே ஆவியானவர் நம்முடைய ஆவியுடன் சொல்லும் யாவையும் தைரியமாய்ச் சொல்ல வேண்டும். ஆனால் அதே சமயம் ஆவிக்குரிய வாழ்வின் வெற்றிக்குரிய முந்தின 3 படிகளையும் வாழ்வில் கடைபிடிக்கிறோமா என்பதையும் கவனிக்கவேண்டும். அப்படியில்லாத பட்சத்தில் சொல்லப்படும் யாவும் ஆவியானவரால் உண்டானவையல்ல. பிசாசின் வஞ்சனையில் விழக்கூடாது.

**ஆவியின் சத்தத்தை எப்படி உணருவது ? :**

II இராஜாக்கள்; 20 : 1 - 7 வரையிலுள்ள வசனங்களில் எசேக்கியா இராஜா வியாதியுடன் மரணப்படுக்கையில் கிடந்த போது கர்த்தர் ஏசாயாவை அனுப்பி "நீ பிழைக்க மாட்டாய் வீட்டுக் காரியங்களை ஒழுங்குபடுத்து" எனத் தீர்க்கதரிசனம் சொல்லச் சொன்னார். சொல்லிவிட்டு ஏசாயா முற்றத்தில் போகுமுன் எசேக்கியா தேவனிடம் ஆயுளுக்காக விண்ணப்பித்த போது, திரும்ப ஆண்டவர் ஏசாயாவிடம் பேசினார். திரும்பி வந்த ஏசாயா" இன்னும் 15 வருடம் ஆயுள் நாள் கூட்டப் பட்டுள்ளதைத் தீர்க்கத் தரிசனமாகச் சொன்னார். இது எப்படி? ஆம் ஏசாயா தன்னுடைய ஆவியின் சப்தத்தின் மூலம் தேவன், பேசின வார்த்தைகளைப் புரிந்துகொண்டு கீழ்ப்படிந்து திரும்பவும் வந்து சொன்னார். எனவே நம்முடைய வாழ்விலும் ஆவியின் சப்தமாகிய (Voice of the Spirit) தேவனுடைய ஆவியானவரின் வார்த்தைகட்கு கீழ்ப்படிய பழகிக் கொண்டால் தேவனுடைய திராட்சைத் தோட்டப் பணியில் உபயோகமுள்ள வர்களாயிருப்போம்.

# முடிவுரை

**அன்பே பிரதானம் :-**

இதுவரை யாவையும் வாசிக்க அருமை தேவப்பிள்ளையே! கடைசியாகச் சில காரியங்களையும் எழுதி விடுகின்றேன்.

"நான் தீர்க்க தரிசன வரத்தையுடையவனாயிருந்து; சகல இரகசியங்களையும் சகல அறிவையும் அறிந்தாலும், மலைகளைப் பேர்க்கத்தக்கதாகச் சகல விசுவாசமுள்ளவனாயிருந்தாலும் அன்பு எனக்கிராவிட்டால் நான் ஒன்றுமில்லை"-1கொ : 13:2

இதுவரை அனேக ஆவிக்குரிய இரகசியங்களை அறிந்திருக்கிறீர்கள். வாசித்த நீங்கள் யாவரும் ஆவியில் விடுதலையடைந்து பரிசுத்தாவியானவரின் வல்லமையுடன் மேற்கொள்ள வேண்டுமென்று ஆசிக்கிறேன். வஞ்சிக்கிற ஆவிகளை அடையாளம் கண்டு கொண்டு நீங்கள் ஆத்தும வல்லமையிலும்-பிசாசின் வல்லமை-யிலும் அகப்பட்ட அனேகரை தேவ ஆவியின் துணையுடன்

விடுவிக்க முன் வருவீர்களாக! பரிசுத்தாவியானவரின் எல்லா வரங்களிலும் நீங்களும் கிரியை செய்து, இக்கடைசி நாட்களில் தேவராஜ்யப் பரம்புதலுக்கு உறுதுணையாய் நிற்பீர்களாக. அதே சமயம் மேலே எழுதப்பட்ட வசனத்தை கைக்கொள்ள கவனமாக இருப்போம். ஆவியானவரின் வல்லமையுடன் அடையாளங்களையும் அற்புதங்களையும் செய்து; ஆவிக்குரிய வரங்களில் உபயோகப்படுத்தப்பட்டாலும், யாவிலும் 'அன்பு' இணைந்தேகிரியைச் செய்ய வேண்டும். அன்பில்லாத எந்த ஆவிக்குரிய கிரியையும் கனியற்ற தாகிவிடும். எனவே கனியுள்ள ஆவிக்குரிய வாழ்வு நடத்திட அன்பே முக்கியமானது இன்று அனேகர் ஆவிக்குரிய இரகசியங்களை அறிந்திருந்தும்; வரங்களில் உபயோகப்படுத்தப்பட்டும் வந்தாலும் முக்கியமான அன்பை விட்டு விடுகிறபடியால் யாவுமே பயனற்ற தாகி விடுகின்றது எனவே நாம் யாவருமே அன்பை நாடுவோம்.

''ஆவியின் வரங்கள் ஒன்பதனை
ஆவலுடன் நாமும் பெற்றிடுவோம்
சபையின் நன்மைக்காய் உபயோகிப்போம்
சந்ததம் சபைதனில் நிலைத்திருப்போம்''

என்ற பாடலை இணைந்து பாடி வெற்றிக்கொடி நாட்டுவோம்

''ஆவி ஆத்துமா தேகம் அவர் பணிக்கே
இனி நானல்ல அவரே எல்லாம்
என முடிவு செய்தோம் அதில் நிலைத்திருப்போம்
அவர் நாளினில் மகிழ்ந்திடுவோம்''

ஆமென்; அல்லேலூயா! கர்த்தர் உங்களை ஆசீர்வதிப்பாராக!



**என்னுடைய சாட்சி :**

நான் ஒரு கிறிஸ்தவ குடும்பத்தில் பிறந்து கிறிஸ்தவ முறைப்படி வளர்க்கப்பட்டேன். உலக புகழேணியில் ஏறிக் கொண்டிருந்த நான் சமாதானம் சந்தோஷம் இல்லாமல் அலைந்தேன். 1968-ஆம் ஆண்டு மார்ச் 17-ஆம் தேதி என் நண்பர் சகோ. செல்வின் மூலமாக கர்த்தர் சந்தித்தார். அன்று என் பாவத்தை இயேசுகிறிஸ்துவினிடம் அறிக்கை செய்து (I யோ : 1 : 9) பாவமன்னிப்பை பெற்றுக் கொண்டேன். II கொரி 5 ; 17ன் படி என் வாழ்க்கை மாறிற்று. கர்த்தருடைய வசனத்தின்படி (மாற் 16 : 16) முழுக்கு ஞானஸ்நானம் பெற்றேன். கர்த்தர் கிருபையால் என்னை தம் ஆவியினால் அபிஷேகம் பண்ணினார். நான்கு ஆண்டுகள் Air Indiaவில் Traffic Assistant ஆக வேலை பார்த்தேன். அப்பொழுது கர்த்தர் எங்களை தம் ஊழியத்திற்கு அழைத்தார். வேலையை ராஜினாமா செய்துவிட்டு, கர்த்தருடைய வார்த்தையின்படி அந்தமான் தீவிற்கு சென்று அவருடைய ஊழியத்தை ஓராண்டுகாலம் குடும்பத்தோடு ஊழியம் செய்தேன். பிறகு அமெரிக்கா தேசம் சென்று Theology படித்து விட்டு, கர்த்தரின் வார்த்தைக்கு கீழ் படிந்து, மறுபடியும் இந்தியாவிற்கு வந்து இந்த 'ஷைலோ' ஊழியத்தை ஆரம்பித்து, கர்த்தருடைய பெரிதான கிருபையால் நடத்தி வருகிறேன். எனக்காகவும் என் குடும்பத்திற்காகவும் என் உடன் ஊழியர்களுக்காகவும் ஜெபித்துக் கொள்ளுங்கள்.

ஷைலோவின் பணியில்

**வசந்த் எட்வர்ட்.**

SHILOH EVANGELISTIC MISSION
280 / 11. M. K. N. ROAD.
ALANDUR, MADRAS-600 016.
SOUTH INDIA

PRINTED AT JAI PRINTERS, MADRAS 600 088